# சிலுவையின் பாதையில் சிதறிய சிந்தனைகள்....



கரவையூர்ச் செல்வம்

# சிலுவையின் பாதையில் சிதறிய சிந்தனைகள்...



# என்னுரை

'புதிய உலக' வானொலி நேயர்கள், 'காவலன்' வாசக அன்பர்கள் அனைவருக்கும் எமது அன்பு கலந்த வணக்கம்.

இந்த 'என்னுரை'யை ஒரு மடலாகவே வரையவே விரும்புகிறேன்.

ஈழத்து வானொலியில் — முக்கியமாகப் "புதிய உலகம்" வாயிலாகவும், பத்திரிகையில் — முக்கியமாகக் "காவலன்" வழியாகவும் நான் உங்களுடன் அடிக்கடி தொடர்புகொண்டேன்.

வானொலி நிகழ்ச்சிகளில் புனித வார நிகழ்ச்சிகளும், தவக்கால நிகழ்ச்சிகளும் ஏனைய நிகழ்ச்சிகளில் இருந்து வேறு படுத்தப்பட்டு ஒரு தனித் தொகுப்பாக உங்கள் கரங்களில் உள்ளன. ஏனைய நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பான எமது உரைகள் இன்னோர் தொகுப்பாகி 'காற்றில் கலந்தவை' என்னும் தலைப்புடன் வெளிவந்துள்ளன.

## தொகுப்பின் பின்னணி:

1975-ம் ஆண்டு புனித வாரத்துக்கென ஈழத்து வானொலி தமிழ்ச்சேவை ஒன்றில் சில சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பினோம். இந்நிகழ்ச்சிகள் கிறீஸ்துவின் இறுதிப்பாடுகளை மையமாகக் கொண்டவை. இந் நிகழ்ச்சிகளுக்கு நேயர்களிடமிருந்து நல்ல வரவேற்பு இருந்தது. இந்து சமய மக்களிடமிருந்தும் பல வாழ்த்துமடல்கள் வந்தன,

அப்பொழுது தமிழ்ச்சேவை ஒன்றின் இயக்குநராகக் கடமையாற்றிய திரு. இராஜசுந்தரம் அவர்கள் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பான மறுநாளே தொலைபேசியில் அழைத்து பாராட்டி வாழ்த்துவதுடன், தமது நண்பர்கள் பலர் நிகழ்சிகளால் பெரிதும் கவரப்பட்டதாகவும் அடிக்கடி அறிவித்தார்.

நற்செய்தியை அறிவிப்பதுதான் எமது கடன், மிகுதி இறைவனின் அருள். ஆயினும் எமது கடனை எம்மாலான மட்டும் எமது சூழலுக்கேற்ப நிறைவாகச் செய்ய முயற்சி எடுத்தேன்.

இதன் பயனாக 1976-ம் ஆண்டும், 1977-ம் ஆண்டும் புனித வாரச் சிந்தனை தவக்காலத்தையும் எட்டிப்பார்த்தது. 1978-ம் ஆண்டு தவக் காலத்தில் மேலும் பல நிகழ்ச்சிகள் எமக்குத் தரப்பட்டன. ஆகவே முறைப்படி ஒழுங்குபடுத்தி தவக்கால வெள்ளிதோறும் சிலுவையின் பாதையில் சிந்தனைகளைத் தொகுத்து ஒலிபரப்பினோம். புதிய பொருத்தமான பாடல்கள் சிலவும் சேர்ந்து நிகழ்ச்சிகளுக்கு மெருகூட்டின.

1979-ம் ஆண்டு அதே சிந்தனைகளுக்குப் பொருத்தமான புதிய பாடல்களும் யாக்கப்பட்டு பொருளோடு தொகுக்கப்பட்டு ஒலிபரப்பாகின.

ஆனால், 1975-ம் ஆண்டில் இருந்து தவக் காலத்துக்கும் புனித வாரத்துக்குமென எமக்குத் தரப்பட்டு வந்த வானொலி நேரம் 1979-ம் ஆண்டு வெகுவாகக் குறைக்கப்பட்டு விட்டது. இதனால் திட்டமிட்டபடி சிலுவையின் பாதையில் நாம் தொகுத்த பதினான்கு கட்டங்களையும் தொகுத்து ஒலிபரப்ப முடியவில்லை.

இக் குறையை ஓரளவு ஈடுசெய்ய எண்ணியே 'காவலனிலும்' 'தினபதி'யிலும் தவக்கால வெள்ளிதோறும் இச்சிந்தனைகளை அச்சேற்றி வந்தோம். இவை ஒலி வடிவிலும் கேட்க வேண்டுமென்று நினைத்தே இவற்றைப் பாடல்களுடனும் பொருத்தமான புதிய ஏற்பாட்டு வாசகங்களுடனும் ஒலிப்பதிவு செய்து 'கசற்' விநியோகத்தில் ஈடுபட்டோம்.

## பல்வேறு கோணத் தாக்குதல்:

மக்கள் தொடர்பு சாதனங்கள் ஒன்றுக் கொன்று நிறைவளிப்பவை. பல்வேறு சாதனங்களின் மூலமாக சிந்தனையுடன் மக்களை அடைவதுதான் "புதிய உலகம்" சமைக்க நாம் கண்ட வழி. கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி எவ்வளவு மக்களை அடைய முடியுமோ அவ்வளவு மக்களை அடைய நாம் முயற்சி செய்தோம். வார்த்தை என்னும் விதையை ஆங்காங்கே எறிகின்றோம். அவை எங்காவது சில உள்ளங்களில் விழும்—ஆண்டவன் அருளால் வளரும் என்ற நம்பிக்கை உண்டு.

'காவலனி'ல் தவக்கால வெள்ளிதோறும் வெளிவந்த "சிலுவையின் பாதையில் சிதறிய சில சிந்தனைகளி"ன் தொகுப்பே இச்சிறு நூல்.

இதனை இவ்வடிவில் கொண்டுவர முதலில் அனுமதி அளித்து, பின்னர் நூல் வடிவில் தொகுக்கத் தானே முன் வந்த 'காவலன்' ஆசிரியரும், யாழ்ப்பாணம், புனிதவளனார் அச்சகப் பொறுப்பாளருமான அருள்திரு மேரி ஜோசவ் அவர்களுக்கு எமது நன்றிகள்.

சிதறிக் கிடந்த இந்நிகழ்ச்சிகளைத் தொகுத்தெழுதி தட்டச்சில் கோர்த்து உதவிய நண்பர் திரு. எஸ். எஸ். யேசுதாஸ் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

"சிலுவையின் பாதையில் சிதறிய சில சிந்தனைகள்..." உங்கள் சிந்தனையைத் தூண்டவும், உங்கள் சிந்தனையின் அடிப்படையில் நீங்கள் புது வாழ்வு காணவும் உதவவேண்டுமென்பதே எமது பேரவா. எமது மன்றாட்டும் அதுவே.

சிலுவை சுமந்த இயேசுவின் அன்பின் அழைப்பில் நீங்கள் உங்கள் சுமை குறைத்து வாழ, அமைதியில் வாழ, உறுதியுடனும் நம்பிக்கையுடனும் வாழ வாழ்த்தி இறையருளை இறைஞ்சி அன்பு வணக்கம் கூறி விடைபெறுகிறேன்.

வணக்கம், சகோதர சகோதரிகளே!

— காவையூர்ச்செல்வம்

# விளக்கவுரை

"சிலுவையின் பாதையில் சிதறிய சில சிந்தனைகள்..." என்ற தலைப்பில் உங்கள் கரங்களில் இருக்கும் இச்சிறு நூல் ஒரு வகையில் புதுமையானது; அதனாலேயே வாசக—பக்தர்கள் நலன் கருதி இந்த விளக்கவுரையைத் தருகின்றோம்.

சிலுவைப் பாதையென்பது திருச்சபையில் ஒரு பழமையான செப வழிபாடு. ஆனால், இதுவும் செபமாலையைப் போல ஒரு பழக்கமாகி ஒரு வெறும் பக்தி முயற்சியெனக் கருதப்பட்டு ஒரு வாய்ப்பாடு போன்று மாறிவிட்டது. பொருளற்ற ஒரு வழக்கமென மாறிவிட்டது.

வழமையான சிலுவைப்பாதையில் பதினான்கு "ஸ்தலங்"கள் உண்டு. அத்தனை "ஸ்தலங்"களுக்கும் நற்செய்தி ஏடுகளில் நேரடிச் சான்றுகள் கிடையா. பாரம்பரியம் தந்து சென்ற செல்வமெனக் கொள்ள வேண்டும். இப்பாரம்பரியத்தில் கற்பனையும் கலந்திருக்கலாம்.

## பலவகை:

தவக்கால மென்றதும் பலர் கோவில்களில் சிலுவைப் பாதை செய்வதைப் பார்த்திருக்கிறேன். இவர்களைப் பல்வேறு வகையாக வகுக்கலாம். மேலெழுந்த வாரியாக மூன்று வகையாக வகுத்துள்ளேன்.

யாழ்தேவி போன்று ஒவ்வொரு ஸ்தலத்திலும் ஒன்று இரண்டு நிமிடங்கள் தரித்துச் செல்வோர்—ஒரு ரகம்; மெயில் வண்டி போன்று அதே ஸ்தலங்களில் இன்னும் சில நிமிடங்கள் அதிகமாகவே தரித்துச் செல்வோர்—இன்னொரு ரகம்; நேரமெல்லாம் தன்னுள் அடக்கி வந்தோர் போவோர் அனைவருக்கும் பெருமனதுடன் வழிவிட்டுச் செல்லும் "குட்ஸ்" வண்டி (Goods train) போன்று ஒவ்வொரு ஸ்தலத்திலும் தங்கி இரண்டு சொட்டுக் கண்ணீர் சிந்திச் செல்வோர்—பிறிதொரு ரகம்.

இவர்களுக்கென வெவ்வேறு வகையான சிலுவைப்பாதை நூல்களும் உண்டு. அந்த ரகத்தில் இந்நூல் அமைவதை நான் விரும்பவில்லை.

## முடிவில் ஒரு தொடக்கம்:

சிலுவையின் பாதை கிறீஸ்துவின் பிறப்புடன் தொடங்கியது, அவருடைய உயிர்ப்புடனும், விண்ணக எழுந்தேற்றத்துடனும், அன்புக் கட்டளையுடனும் அவருடைய சிலுவைப் பாதை நிறைவடைகிறது. இது இறையியல்.

அவரின் முழுமையான இவ்வாழ்க்கை இன்றைய மக்களுக்கும், இனிவரும் மக்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டியதொன்று: அவரே அந்த அன்புக் கட்டளையைத் தந்துள்ளார். "சென்று சொல்லுங்கள்"

ஆகவே, கிறீஸ்துவின் சிலுவையின் பாதை எங்கு நிறைவடைகின்றதோ அங்குதான் எமது சிலுவைப் பாதை தொடங்குகின்றது.

மீட்பு வேலை, இரட்சிப்பு வேலை நடந்து முடிந்த ஒரு கதையல்ல. இன்னும் இனியும் நடக்க வேண்டிய வாழும்—வாழ்விக்கும் சம்பவம்: இந்த மீட்பு வேலையை, விடுதலை வேட்கையை கிறீஸ்து எம்மில் எம்மால் செய்கின்றார்.

இவ்வகையில் சிலுவைப்பாதை பயன்பட வேண்டுமெனச் சிந்தித்தோம்.

ஆகவே, முதலில் நான்கு நற்செய்தி ஏடுகளின் தொகுப்பினூடே வரலாற்று ரீதியாக, வேதாகம ரீதியாக சிலுவையின் பாதையில் வழி நடந்தோம்; அங்கு பல கூட்டங்களைச் சந்தித்தோம்; அவை இன்று வாழ் எமக்கு அருமையான செய்தி சொல்வதை உள்ளத்தின் ஆழத்தில் கேட்டோம்;

அவற்றிற்கு எழுத்து வடிவம் கொடுத்தோம்—காவலனில்; ஒலி வடிவம் கொடுத்தோம்—வானொலியில் அவ்வளவுதான்.

## சிந்தனைக்கும்... செயலுக்கும்
## சிலுவைப் பாதை

ஆலயம் சென்று ஒவ்வொரு ஸ்தலமாக செல்லவேண்டிய அவசியமில்லை. இந்நூலை வைத்துப் படித்துத்தான் சிலுவைப் பாதை செய்யவேண்டுமென்ற அவசியமில்லை, ஒவ்வொரு கட்டத்தையும் பொருளோடு வாழ்க்கைப் பிரச்சினைகளோடு பொருத்தி சிலுவையின் பாதையில் உள்ள வெவ்வேறு கட்டங்களுக்குரிய சிந்தனையைப் பெறலாம்—பெறவேண்டும் என்பதுதான் எமது முக்கிய நோக்கம்.

வெறும் செபமாகவும், பக்தி முயற்சியாகவுமே சிலுவைப் பாதை அமைந்துவிடாமல், அது வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒரு செபமாக, வாழவைக்கும் ஒரு சிலுவையாக அமைய வேண்டுமென்பது தான் எமது குறிக்கோளாகும்.

இன்றுவாழ் சமுதாயத்தில் எமது இன்றைய ஈழச் சூழலில் சிலுவைப்பாதை நிறையச் செய்தி சொல்லியது. சிந்தனைகள் பலவற்றை நிறைத்துத் தந்தது. ஆயினும் அவற்றிற் கெல்லாம் ஈழத்து வானொலியில் ஒலிவடிவம் கொடுக்கமுடியவில்லை. அவ்வளவு கட்டுப்பாடு, இந்த நாட்டில். சில சொற்களை சொல்லவே முடியவில்லை: ஏன், நற்செய்தியில் இருந்து சில குறிக்கப்பட்ட பகுதிகளை அப்படியே மேற்கோள் காட்டிப் படிக்க அனுமதி தரப்படவில்லை. இப்படிப்பட்ட ஒரு கடுமையான கட்டுப்பாடு கொண்ட அமைப்பில் சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம்! இதுவே ஒரு சிலுவைதானே? மிகப் பெரிய சிலுவை!

## வார்த்தை இன்றும் மாமிசமாக வேண்டும்:

வாழும் ஆண்டவன் வார்த்தை இன்றும் மனுவுருவெடுக்கின்றது, எமது சிந்தனையினாலும் உடன்பாட்டாலும் அந்த மனித உருவில்தான் சிலுவைப்பாதையே உண்டு.

மக்களினம் மீண்டும் மீண்டும் சிறைப்படுகின்றது; அவை புதிய சிறைகள்: மக்களினம் மீண்டும் மீண்டும் அடிமைப் படுத்தப் படுகின்றது: அவை "நாகரிகமான" அடிமைத் தனைகள். இவற்றில் இருந்து அதே மக்களினம் மீட்படைய வேண்டும். கிறீஸ்துவின் மீட்பு வேலையில் நாமும் பங்கு கொள்ளுவதாலேயே இந்த மீட்பை பெறமுடியும்.

இந்த மீட்பு பொருளாதார—சமூக அரசியல்-மத ரீதியாக அமைந்து முழுமனிதனுக்கும் மீட்பளிக்க வேண்டும்;

இந்தக் கோணத்திலேயே இச்சிலுவைப்பாதைச் சிந்தனை அமைந்துள்ளது.

பலிப்பூசை வழிபாட்டுடன் இச்சிலுவைப்பாதை மிக அழகாகவும் பொருத்தமாகவும் அமையும்;

சிலுவையின் பாதையில் சிந்தியுங்கள்: செயற்பட விழையுங்கள். 'புதிய உலகம்' ஒன்று உருவாகும்;

—கரவையூர்ச் செல்வம்.

# சிலுவையின் பாதையில் சிதறிய சிந்தனைகள்....

## I தவக்காலச் சிந்தனை

## கரியா பூசினீர்கள்?

சென்ற புதன்கிழமை எமது கோவில்களில் ஒரு சடங்கு நடைபெற்றது. கோவில் சென்ற அனைவரும் கண்டிருப்பார்கள்.

சென்றவருடக் குருத்தோலை ஞாயிறன்று கொடுத்த ஓலைகளைச் சேகரித்து எரித்துச் சாம்பலாக்கினார்கள். அச்சாம்பல் எங்கள் நெற்றிகளில் சிலுவை அடையாளங்களாகப் பூசப்பட்டன.

"முகத்தில் கரி பூசினது போன்று" என்ற ஒரு வழக்கு நம்மிடையே உண்டு. அதன் அர்த்தம் என்ன? ஒருவனைத் தாழ்மைப்படுத்தினார்கள், சிறுமைப்படுத்தினார்கள் என்பது தான்- யாரும் தாழ்மைப்படுத்தப்பட விரும்புவதில்லை. அதுவும் நாலுபேர் முன்னிலையில் எமது பெருமை விருப்புடன் இருக்கவேண்டும், எமது மதிப்பைக் காப்பாற்றவேண்டும் என்பதுதான் மனித இயல்பு. எமது பெருமையை விட்டுக் கொடுக்க நாம் விரும்புவதில்லை.

இப்படிப்பட்ட மனித சுபாவம் எப்படி நெற்றியில் சாம்பல் பூச அனுமதிக்கும்? அதுவும் நூற்றுக்கணக்கான மக்கள் முன்நிலையில்...............

ஒரு துறவற மடத்தில் ஓர் இளந்துறவி தன்னை மேலும் மேலும் தாழ்மைப்படுத்த வேண்டுமென்று விரும்பினார். தாழ்மை என்ற புண்ணியத்தை அனுபவிக்க வேண்டும் என்பது அவரது அவா. ஆகவே அம் மடத்துக்கு வரும் குருவானவரிடம் இந்த ஆவலைச் சொன்னார் அந்த இளந்துறவி.

"சுவாமி! நான் தாழ்மையாக இருக்க விரும்புகிறேன். எப்படி என்னைத் தாழ்மைப்படுத்துவது என்று தெரியவில்லையே!" என்று அங்கலாய்த்தார்.

"மகனே, கவலைப்படாதேயும். சந்தர்ப்ப சூழ்நிலைகள் வரும் அப்பொழுது தாழ்மையாகவிருந்து பழகவேண்டும். படிப்படியாக அப் புண்ணியத்தை முழுமையாக வாழலாம்" என்று அக் குருவானவர் கூறினார்.

அப்பொழுது குருவானவருடைய மனதில் ஒரு திட்டம் உருவாகிவிட்டது. ஆயினும், அவர் காலம் வருமெனக் காத்திருந்தார்.

நாட்கள் பல ஓடி மறைந்தன.

ஒருநாட் காலை குருவானவர் அம்மடத்திற்குப் பலிப் பூசை ஒப்புக் கொடுக்கச் சென்றார்.

பலிப்பூசைக்கு எல்லாம் ஆயத்தமாக இருந்தன. ஆயினும், பலிப்பூசைக்கு வைத்த பலிப்பூசை உடைகள் சரியில்லை என்று குருவானவர் முறைப்பட்டார்.

அந்த இளந் துறவிதான் அவற்றைக் கண்காணிப்பது. அவருக்குக் குறையாக எதுவும் தோன்றவில்லை. குருவானவர் முறைப்படுகிறாரே என்று வேற்றுடைகளை ஆயத்தஞ் செய்தார்.

குருவானவர் எப்பொழுதும் குற்றம் கண்டார். இப்படி மூன்றும் முறையும் தொடங்கும் பொழுது அந்த இளந் துறவி......

"இவற்றில் என்ன குறையிருக்கு? எப்பொழுதும் போலத்தானே இன்றும் ஆயத்தம் செய்தேன்! எத்தனை குருமார் இங்கு வந்து பலிப்பூசை ஒப்புக்கொடுத்துச் செல்கிறார்கள்! அவர்கள் என் வேலையைப் பாராட்டுகிறார்களே தவிர இதுவரை குறைகூறியதில்லை" என்று பொரிந்து தள்ளினார்.

குருவானர் பொறுமையுடன் மெதுவாகச் சொன்னார். "நீங்கள் உங்களைத் தாழ்மைப்படுத்த வேண்டுமென்று சொன்னீர்கள். அதற்கு இப்படியொரு வாய்ப்பைத் தரலாமென்று எண்ணினேன். அவ்வளவுதான். வேண்டாமென்றால்"......

முகத்தில் அசடுவழிய அவ்விளந் துறவி குருவானவர் சொல்லி முடிக்குமுன்னரே 'அப்படியானால் நேரந்தோடு அதைச் சொல்லியிருக்க வேண்டுமென்றார்.'

இக்கதையில் ஓர் உண்மையுண்டு. நேரகாலம் பார்த்துப் புண்ணியங்களை அனுசரிப்பது இலகுவானது. ஆயத்தமான மேடைகளில் ஒறுத்தல், தவம் செய்வது கடினமன்று.

விபூதிப் புதன் கிழமைகளில் விபூதி பூசுவது இன்று ஒரு சடங்காகி, அன்றைய தினத்தில் நெற்றியில் விபூதிச் சிலுவையுடன் காட்சிதருவது ஓர் அழகான சம்பிரதாயமாக மாறிவிட்டது.

அதனால் எத்தனைபேர் எம்மைத் தாழ்மைப்படுத்துகிறோம் என்பது மற்றொரு கேள்வி. அதன் பொருளை எப்படிப் புரிந்துகொண்டோமென்பது பிறிதோர் பிரச்சினை.

தவக்காலத்தில் நாம் செய்யவேண்டியது என்ன? உண்மையை ஆழமாகத் தேடவேண்டும். வெறும் சடங்குகள்—சம்பிரதாயங்கள்—பழக்கவழக்கங்கள் வெளி வழிபாடுகள் முதலானவற்றிலிருந்து எம்மை மீட்க வேண்டும். உண்மையை அறிந்துவாழ முயலவேண்டும். அதனால் வரும் துன்ப துயரங்களை ஏற்றுக்கொள்ளப் பழகவேண்டும். இதுவே பெரிய ஒறுத்தல்—ஆழமான பக்தி—உண்மையான மறை.

சென்ற 28-ம் திகதி (28-2-1979) புதன் கிழமை கிறீஸ்தவ மக்களுக்கு நோன்புக்காலம் தொடங்கியுள்ளது. பெரிய வெள்ளியன்று முடிவு பெறும் இந்த நோன்புக்காலத்தில் கிறீத்தவர்கள் வெறும நோன்பிருப்பது மட்டுமல்ல, வெறும் செபங்கள் சொல்லுவது மட்டுமல்ல, அனைத்துக்கும் மேலாக அவர்கள் கிறீத்துவின் இறுதிக்காலப் பாடுகளையிட்டு ஆழமாகச் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

வரலாற்றுச் சம்பவங்களை மீட்டுச் சிந்தனை செய்வது சம்பிரதாயத்துக்காகவல்ல. அன்றேல் அது ஒரு பக்தி முயற்சி என்பதற்காகவுமல்ல.

அன்றைய சம்பவங்கள் இன்றைய சூழலில் எமக்குச் சொல்லும் செய்தி என்ன? இன்று அவை தரும் சிந்தனையென்ன? இதுபோன்ற வினாக்களுக்கு விடைதேடவே வரலாற்றுச் சம்பவங்களை மீட்டு ஆய்வு செய்கின்றோம். இந்த ஆய்வு

வெறும் அறிவியல் ரீதியாக அமைந்து விடாமல், வாழ்வியல் ரீதியாக வாழப்படவும் வேண்டும். இதுதான் கிறீத்தவக் கொள்கை.

வழமையான சிலுவைப்பாதையின் கட்டங்களில் (ஸ்தலங்கள்) இருந்து, 'எமது' சிலுவைப்பாதை சற்று வேறுபடுகின்றது.

நான்கு நற்செய்தி ஏடுகளையும் எமது வழிகாட்டிகளாக வைத்து, வரலாற்றின் அடிப்படையில் கிறிஸ்துவின் வாழ்க்கையை, சிலுவையின் பாதையில் காண நாம் முயற்சித்தோம். அதன் விளைவுதான் விவிலிய மயமான சிலுவைப்பாதை.

அன்பு செய்யச் சொன்ன கிறிஸ்துவின் அன்புக்கட்டளை தொடங்கி (இறுதி இரவுணவு—பெரிய வியாழன்), சென்று அன்பை வாழுங்கள்" (விண்ணகம் எழுமுன்னர்) என்ற கிறிஸ்துவின் அன்பின் வேண்டுகோளில் முடியும் இச் சிலுவைப் பாதை சிந்தனையைத் தூண்டுவதற்கே.

கிறீத்தவர்கள் என்ற அமைப்புக்கு அப்பாற்பட்டு நிற்கும் அனைத்து மக்களுக்கும் இச் சிந்தனை பயன்படும்—பயன்பட வேண்டுமென்பது எமது பேரவா!

## ஏன் இந்தத் தவக்காலம்?

நாற்பது என்ற எண்ணிக்கைக்கும் கிறீத்தவ மறைக்கும் ஒரு நெருங்கிய தொடர்பிருக்க வேண்டும்.

உதாரணங்கள் சில: கிறீஸ்து பிறந்து நாற்பது நாட்களுக்குப் பின்னர் அவர் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஆண்டவனுக்குக் காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்டார். இது ஒரு பழைய ஏற்பாட்டுச் சம்பிரதாயம்—திருச்சடங்கு. ஆகவே, இந்த எண் நாற்பது மிகத் தொன்மையான காலத்தில் இருந்து வருகிறதெனலாம்.

கிறீஸ்துவளர்ந்து முப்பது வருடங்களை அடைந்தபொழுது அவர் தமது பகிரங்க வாழ்வை, பொது வாழ்வை, தமது பணி வாழ்வைத் தொடங்குமுன் நாற்பது நாட்களாகத் தவமிருந்தார். அந்த நாற்பதுநாட்களையும் செபத்திலும், நோன்பிலும் செலவழித்தார்.

கிறிஸ்து உயிர்த்து விண்ணகம் சென்று நாற்பது நாட்களுக்குப் பிறகு பரிசுத்த ஆவி (சக்தி) அவரின் சீடர்களையும் தாயையும் ஆட்கொண்டார் என்று நற்செய்தி ஏடுகள் கூறுகின்றன. அந்த நாற்பது நாட்களும், சீடர்களும் அவர் தாயும் செபத்திலும் தபத்திலும ஆழ்ந்ததாகவும் அதே ஏடுகளான நற்செய்தி ஏடுகள் கூறுகின்றன.

கிறிஸ்துவின் வழியைப் பின்பற்றுவோரும் ஆண்டுதோறும் இந்த நாற்பது—நாள் ஆயத்த காலத்தைக் 'கொண்டாடி' வருகிறார்கள்.

கிறிஸ்து தமது முப்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடிய பின்னர், வீட்டைவிட்டு, தாய்தந்தையர், உற்றார் உறவினரை விட்டு ஒருவகைத் துறவற வாழ்வை—மக்கள் பணிவாழ்வை—மக்களுக்காக, அவர்களின் முழு மீட்புக்காக வாழும் ஒரு வாழ்க்கையைத் தொடங்க முன்வந்தார்.

இவ்வாழ்க்கை மிகக் கடினமானது, பல்வேறு இடையூறுகள், எதிர்ப்புகள், தப்பாக விளங்கிக் கொள்ளுதல்கள் ஒதுக்கல்கள், நன்றிகெட்டதனங்கள், காட்டிக்கொடுத்தல்கள் என ஆயிரம் வரும்; அவற்றையெல்லாம் அவர் முன்னோடியாகவே சிந்தனை செய்திருப்பாரென்பது எமது ஊகம், அதில் புதுமையோ வியப்போ எதுவுமில்லை;

நாம் ஒரு பாரிய பொறுப்பான வேலையைத் தொடங்கு முன்னர் இப்படிப்பட்ட தொலை—நோக்கோடு, தீர்க்கதரிசனப் பார்வையோடு செயற்படுவதுண்டுதானே? ஒவ்வொரு தலைவனும் அவ்வாறு செயற்பட வேண்டும், கிறிஸ்து ஒரு மாபெரும் தன்னிகரற்ற சமூகத் தலைவனுமல்லவா?

முப்பது வருடங்களாக அவர் இந்த ஆயத்தத்தைச் செய்திருப்பாரென்று நாம் எண்ண இடமுண்டு; ஆயினும், அப்புது வாழ்வை, பொறுப்பான வாழ்வைத் தொடங்குமுன்னர் ஓர் அண்மித்த ஆழமான, உறுதியான ஆயத்தத்தைச் செய்வதற்கென அவர் பாலைவனத்திற்குச் சென்றார்; அப்பாலை வனத்தில் தான் அவர் நாற்பது இரவும் நாற்பது பகலும் நோன்பிருந்து செபித்தார்—தியானித்தார்—சிந்தித்தார்—திட்டமிட்டார்—செயற்பட சக்திபெற்று உறுதிகொண்டார்;

## பாலைவனப் பண்பு

கிறிஸ்து பாலைவனம் சென்றாரென்று நற்செய்தி கூறுகின்றது? அது யூதேயாவிலுள்ள பாலைவனமாக இருக்கலாம். ஆனால் எந்தப் பாலைவனம், எப்படிப்பட்ட பாலைவனம் என்பது எமது வாழ்க்கைக்கு முக்கியமல்ல.

இந்தப் பாலைவனத்தின் பண்பு என்ன என்பதுதான் எமது வினா?

மனித சந்தடி இல்லாத சத்தமில்லாத, வாழ்வுண்டு என்பதற்குரிய அடையாளங்கள் அதாவது ஏனைய உயிரினங்களின் நடமாட்டம் அதாவது வளர்ச்சி இல்லாத ஒரு வறண்ட பிரதேசம், வாழ்வுக்கு நம்பிக்கை அளிக்காத ஓர் இடம்?

இப்படிப்பட்ட ஒரு தனிமை அவருக்கு வேண்டியிருந்தது? இப்படிப்பட்ட ஒரு பொல்லாத தனிமையில் — கடுமையும் கொடுமையுமான ஒரு தனிமையில் அவர் தனது நோன்பினால் உடலையும் ஒரு பாலைவனமாக்கி சிந்தனை செய்தார், தியானம் செய்தார்; தமது அழைத்தலையிட்டு, வருங்கால பணிவாழ்வை யிட்டு ஆழமாகச் சிந்தித்தார்?

புத்தபிரான் அரசமரத்தடியில் இப்படிப்பட்ட நோன்பு கொண்ட தபத்தில் இருந்தாரென்று பௌத்தமத ஏடுகள் கூறுகின்றன.

எத்தனையோ சைவ, வைணவ பெரியார்கள், முனிவர்கள் இப்படிப்பட்ட நோன்பு கலந்த தபத்தில் ஆழ்ந்ததாக சைவ வைணவ ஏடுகள் எடுத்துரைக்கின்றன.

நோன்பு, தவம், சிந்தனை மூன்றும் ஒன்றாகச் சேரும் ஓர் இனத்தவர்கள் போலும்; ஒருவகை நெருங்கிய உறவினர்களாக இருக்கவேண்டும்! இவர்களுக்குத் தாய்போல் இருப்பவன்தான் பாலைவனம்!

சிந்தனைக்குத் தபம்! தபத்திற்கு நோன்பு: மூன்றிற்கும் அடித்தளம் பாலைவனம்?

சரிதான்—இந்த நாற்பது நாளும் நேயர்களாகிய எம்மையெல்லாம் பாலைவனத்துக்குச் செல்லும்படி ஆசிரியர் சொல்லுவார் போலும் என்று உங்களில் சிலர் முகம் சுழிப்பது எனக்குத் தெரிகிறது?

புதிய உலகம் ஒன்றிற்கு அழைத்துச் செல்லவேண்டும்; அவ்வுலகை நாமே படைக்க வேண்டும் என்பதே எமது குறிக்கோள்; ஆகவே பாலைவனத்திற்கு அழைத்துச் செல்லமாட்டோம்.

ஆனால், ஒரு புதிய உலகம் படைக்க பல தியாகிகள், பல ஒறுத்தல்கள் செய்து, பல கஷ்டங்கள் பட்டுத்தான் ஆகவேண்டும். ஆகவே, வாழ்க்கையில் சில காலங்கள்—சில நாட்கள் ஒரு நாளில் சில மணித்துளிகள் நாம் எமது வாழ்க்கையை பாலைவனமாக்க வேண்டும், ஒருவகைத் தனிமை எமக்கு வேண்டும். துறவறத்தோர்—இல்லறத்தோர் இருசாராருக்கும் வேண்டும்;

வாழ்க்கையில் புத்துயிர்பெற—உடலில் ஒருவகை வரட்சி வேண்டும்; ஒருவகைப் பாலைவனம் வேண்டும்.

அதனாலேயே அனைத்து மதங்களும் நோன்புக்காலத்தை வைத்துள்ளன;

இக்காலத்தில் மட்டும்தான் நோன்பு-தபம்-செபம் என்பதல்ல, விழாக்களைப் போன்று இக்காலமும் ஆண்டுதோறும் வந்து ஞாபகப்படுத்துகின்றது. வாழத் தூண்டுகிறது;

இக்காலத்தை நாம் நன்கு பயன் படுத்திக்கொள்ள வேண்டும்; உணவில் எளிமை-உல்லாசத்தில் குறைப்பு—சிந்தனையில் விரிவு—செபத்தில் ஆழம் என்ற பாணியில் நாம் வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

நீதியும் நேர்மையுமான சமூகத்தைக் கட்டியெழுப்ப இந்நாட்டு முதல்வர் உறுதி பூண்டுள்ளார்;

அவரோடு சேர்ந்து நாமும் எமது தபக்காலப் பிரதிக்கினையாக அந்த உறுதியை எடுப்போம்; நீதியும் நேர்மையுமான சமூகத்தை, நாம் அடிக்கடி கூறிவரும் புதிய உலகத்தை உருவாக்குவோம்.

நமது வாழ்வில் உள்ள ஊழல்கள், பொறுப்பற்ற தன்மைகள், பாரபட்சங்கள், பழிவாங்கல்கள், பொறாமைகள், ஆவலாதி அவதூறுகள், காட்டிக்கொடுத்தல்கள், குழிப்பறித்தல்கள் போன்ற சமூகக்குற்றங்களை நீக்க முயல்வோம்.

நாம் சமூகத்தில் ஏற்றுக்கொண்டபணி சமூகத்துக்குரியது. ஆகவே பொறுப்புடன் அப்பணியை எமது திறமைக்கும், ஆற்றலுக்கும், அறிவுக்கும் ஏற்ப செய்து முடிப்போம்.

தொழில் துறைகளில்—வேலைத்தலங்களில் உரிமை கோரு முன் கடமை செய்வோம்;

இத்தனையையும் நேர்மையோடு செய்ய, நீதியுடன் செயற் படுத்த, அறவழி நின்று செய்ய எமது வாழ்வில் தியானங்கள் வேண்டும், ஒறுத்தல்கள் வேண்டும், சமூக உணர்வு வேண்டும்;

இதுதான் தபம்; செய்வோமா? இப்படிப்பட்ட தபம்செய் வோர் பல சுமைகள் சுமக்கத்தான் வேண்டும். சுமை சுமந்து சோர்வடையும் பொழுது இறைவன் நம்மை அழைக்கின்றார் எம்மைத் தேற்றுவதற்கு, புதிய சக்தியை ஊட்டுவதற்கு.

## சிலுவையின் பாதையில் முதலாவது கட்டம்:

# அன்பு செய்யுங்கள், கிறிஸ்துவின் அன்புக் கட்டளை, இது

(அரு. 15: 9—15)

அன்பு என்ற சொல்லுக்கு இன்று ஒரு புதிய நிறைவே உண்டு, ஆமாம், அன்று பெரிய வியாழன் அல்லது புனித வியா ழன் இல்லை, வியாழன்களுக்கு வியாழனான வியாழன். அன்பிற் கு இலக்கணம் வகுத்த நாள், அன்பின் சின்னமாக ஆண்ட வன் உருவாக்கிய அன்புத் திருநாள். தனது முப்பத்து மூன்று வது வயதில் கிறீஸ்து தன் சீடருக்குத்தானே வைத்த பிரியா விடை நாள், மனிதனோடு மனிதராக வாழ்ந்து உணவுண்ட இறுதி நாள்.

மூன்றாண்டுகளாக அவரோடு கூடித்திரிந்து ஒன்றாக வாழ்ந்த தன் அன்புச் சீடர்களோடு அவர் பந்தியமர்ந்த நாள்.

அப்பமும் இரசமும், மூலிகைகளும் செம்மறியும் யூதர் கள் ஆண்டுதோறும் மீட்பு விழாவின்போது உண்ணும் உணவு. அப்படியொரு ஆண்டு விழாத்தான் 1946 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றது. அவ்விழாவிற்தான் கிறீஸ்து தன் பன்னிரு சீடரோடு பந்தி அமர்ந்தார்.

இந்த இறுதி உணவின் பின்னர் தான் கிறீஸ்து தன் சீடர் களுக்கு பிரியாவிடைஉரையொன்று நிகழ்த்தினர். நீண்டஉரை, அது. அன்பு நிறைந்த உரை, அது. இறுதியாகத் தன் சீடரைப் பார்த்து அவர் கூறினர்—

"நீங்கள் என் நண்பர்கள்
உங்களை நான் இனி ஊழியர் என்று சொல்லேன்;
ஏனெனில், தலைவன் செய்வது இன்னது என்று
ஊழியனுக்குத் தெரியாது;
ஆனால் உங்களை நண்பர்கள் என்கிறேன்
தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட
மேலான அன்பு யாரிடமும் இல்லை."

## ஏதையும் தாங்கும் அன்பின் இதயம்

அவன் காதலன். அவள் காதலி. அவன் அவளைப்பார்த்து, "நான் உன் மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன், தெரியுமா?" என்று அன்போடு சொன்னான்: அவள் மட்டும் என்ன அவ்னது அன்புக்குச் சளைத்தவளா? அவள் சொல்லுவாள் "நானோ உங்கள் மேல் என் உயிரையே வைத்திருக்கிறேன்." இவர்கள் எதைப்பற்றிப் பேசுகிறார்கள்? நிச்சயமாக அன்பைப் பற்றியே; ஆனால், இந்த அன்பை அவர்களால் விளக்க முடியவில்லை; விபரிக்க இயலவில்லை, விரித்துரைக்க வார்த்தைகளில்லை, எடுத்துரைக்கச் சொற்களில்லை. தொட்டுக்காட்டப் புலன்களால் முடியவில்லை. அதுதான் அன்பு, நிரூபிக்க முடியவில்லை; ஆனால், அனுபவிக்க முடியும், அன்பை அனுபவித்தவர்கள் அவ்வனுபவத்தை மீட்டு மீட்டு அனுபவிக்கலாம்; அந்த அன்பின் நினைவுகள் இனிக்கும் நினைவுகளாக, அழியாச் சின்னங்களாக உள்ளத்தில் என்றுமே நிலைத்திருக்கும்; மனத்தில் மறையாது உறைந்திருக்கும்;

'அன்பு'—இந்த மூன்றெழுத்தில் மூவுலகே உண்டு; முத்தமிழும் உண்டு. முப்பாலும் உண்டு; முனிவனும் உண்டு; மன்னனும் உண்டு; வாழ்க்கை முழுமையாக உண்டு. அந்தச் சொல்லை உறுத்திச்சொல்ல முடிவதில்லை. அவ்வளவு இனிமை, அவ்வளவு மென்மை, அவ்வளவு தண்மை, குளிர்ச்சி. அச் சொல்லை எடுத்துரைக்கும் பொழுதே ஏதோ ஒரு மொட்டு இதழ் விரித்து மலர்வது போன்ற ஓர் உணர்வு. அம்மலரிலிருந்து நறுமணம் கொட்டிச்சிதறுவதுபோன்ற ஒரு பிரமிப்பு.

அன்பு கொடுக்கும் என்பார்கள்; அன்பினால் ஆட்கொள்ளப் பட்டுவிட்டால் அங்கு உணர்ச்சி விளையாடும்; சிலவேளைகளில் வெறியாகவும் மாறும். அன்பு இன்னொருவர்பால் விரி

யும் பொழுது அது கொடுக்கும். எதைக் கொடுக்கும்? எதையும் கொடுக்கும்.

காதலனும் காதலியும் முதலில் பொருட்கள் கொடுக்கிருர்கள்: இறுதியில் ஒருவரை ஒருவர், ஒருவரை ஒருவருக்கு முழுமையாகக் கொடுக்கின்ருர்கள்.

இதே போன்றுதான் அன்பு இருக்குமாயின், பெற்ருேர் பிள்ளைகளுக்கும்; பிள்ளைகள் பெற்ருேருக்கும் தம்மைக் கொடுக்கின்ருர்கள்.

உண்மையான அன்பு இருக்குமாயின் ஆசிரியர்—மாணவரிடையேயும், தலைவன்—மக்களிடையேயும், நண்பர்களிடையேயும், இக்கொடுக்கல்—வாங்கல் இருக்கும்: இருக்கவேண்டும்.

"ஒருவன் தன் நண்பர்களுக்காகத் தன் உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு வேறில்லை." என்று அன்பிற்கு இலக்கணம் கூறியவர் கிறீஸ்து; அந்த இலக்கணத்தையே குறளில்,

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்று யாத்து வடித்தார், வள்ளுவர்.

அந்த இலக்கணத்துக்கு இலக்கியமாகக் கிறீஸ்து தன் வாழ்க்கையையும் அமைத்துவிட்டார். பெத்தலகேம் நகரில், கடுங்குளிரில் அவர் அன்பு கொட்டிலில் கொடுத்தது: தேவன் மனிதனுனன்: யூதேயா, கலிலேயா போன்ற நாடுகளில் அவர் அன்பு சேவையாக வீதியிலும் தெருவிலும் கொடுத்தது: மனிதனேடு மனிதனுக வாழ்ந்தார். கல்வாரி மலையில் அவர் அன்பு அவரை முழுமையாகக் கொடுத்தது: மனிதன் தெய்வமானன்.

ஒருவருக்காகவா கொடுத்தார், தன் உயிரை? இல்லை, தன் ஊருக்காகவா கொடுத்தார்? இல்லையில்லை, உலகிற்காகக் கொடுத்தார்; மானிடவர்க்கத்துக்காகத் தம்மை அளித்தார்.

"ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் சிலைகளாகலாம்",
உலகிற்சென்று வாழ்ந்த உள்ளம் உயிர்பெற்று வாழலாம்.

என்னே அவர் அன்பு! குருடருக்குப் பார்வை அளித்தார், செவிடருக்குக் கேள்வி கொடுத்தார்; நோயாளிகளைக் குணப்ப

டுத்தினர். தொடக்கூடாத தொழு நோயாளிகளைத் தொட்டுக் குணப்படுத்தினர், பாவிகளை மன்னித்தார்; இறந்தோரை உயிர்ப்பித்தார். தள்ளிவைக்கப் பட்டோரை ஏற்றுக்கொண்டார். ஒதுக்கிவைக்கப்பட்டவர்களோடு ஒட்டிக்கொண்டார்; வறியோருக்கு நற்செய்தி நவின்றார்; பொதுமக்களின் நன்மையை நாடி பொருளற்ற சட்டங்களையும், சடங்குகளையும் சாடினர்; தட்டிக்கேட்க ஆளில்லாமல் அநீதியாக ஆட்சி செய்த தலைவர்களையும், மத குருக்களையும் தட்டிக்கேட்டார்; ஏன்? அவர் மனிதரில் வைத்த அன்பே காரணம். அந்த ஆழமறியா அன்பு, எதையும் தாங்கும் இதயத்தை அவருக்குக் கொடுத்தது.

கல்லால் எறிந்து கொல்ல முயன்ற பரிசேயரின் சவாலையும் தாங்கிக் கொண்டார். மூன்றாண்டுகளாக அவரோடு கூடித்திரிந்து, அவரின் அன்பின் சேவையைப் பார்த்து உணர்ந்து, அவரோடு பந்தி அமர்ந்து உணவுண்டு பின்னர் கொஞ்சியே வஞ்சித்தானே வஞ்சகன் யூதாஸ்; அதையும் தாங்கினர் அன்புக்காக. அவர் தனிமையில் துன்புற விட்டு விலகினர்களே அவரது பதினொரு சீடர்கள்: அந்த நன்றி கெட்டதனத்தையும் தாங்கினர் அன்புக்காக;

இந்த அன்பைத்தான் வள்ளுவன், "அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்" என்று அழகுறக் கேட்டான்.

இந்த அன்பு விரிந்தது, பரந்து, உயர்ந்து, வளர்ந்தது; ஆழ்ந்தது: ஆனல், அதன் விரிப்பையோ, பரப்பையோ, உயர்வையோ, அறிவதற்கில்லை. அதன் வளர்ச்சியையோ, ஆழத்தையோ உணர்வதற்கில்லை.

## அன்பே கிறிஸ்து, அன்பின் உருவே யேசு, அன்பின் வடிவே இறைமகன்

திருமுழுக்கின் வழியாகக் கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்திருப்போர் அனைவரும் கிறிஸ்தவர்கள்; என் வாழ்வில் அக்கிறித்தவ அன்பு வாழ்க்கையை வாழுகிறேனு? அல்லது சுயநலங்கருதி நானுண்டு என் மனைவி மக்களுண்டு என்று ஒதுங்கி வாழ்கின்றேனு? எமது கிறித்தவ வாழ்வில் உண்மையான அன்பு உண்டென்றால் சாதிக்கொரு கோயில் கட்டுவோமா? மொழிக்கொரு கோயில் உருவாக்குவோமா? பிறமதத்தினரை

விலக்குவோமா? பணம் படைத்தோர்-வறியோர் என்று வேற்றுமை காட்டுவோமா? உயர்ந்தோர்-தாழ்ந்தோர் என்று பகுப்போமா? பதவிகள், செல்வாக்குகள் என்று வகுத்து அடிபணிவோமா? படிப்பது பைபிள்-இடிப்பது கோயில் என்றுதான் வாழ்வோமா?

எனக்கென்று உயிர் கொடுத்த தலைவனுக்கு நான் உயிர் கொடுக்க முன்வர வேண்டாமா?

## இரண்டாவது கூட்டம்:

# கெத்சேமனித் தோட்டத்தில் கிறீஸ்துவின் செபம்

இந்நாட்கள் கிறீத்தவ மக்களுக்கு ஒரு சிறப்பான காலம்; நோன்புக்காலம். நோன்பு தமிழ் மக்களுக்குப் புதிதல்ல. அனைத்து மதங்களிலும் நோன்பிருக்கும் காலம் உண்டு.

நாம் வெறும் நோன்பிருப்பது மட்டுமல்ல, கிறீஸ்துவின் பாடுகளையும் ஆழமாகச் சிந்திக்கின்றோம்; அதனால் நோன்புக் காலத்தில் வரும் வெள்ளிக்கிழமைகள் முக்கியம் பெற்றவை: இந்த ஒவ்வொரு வெள்ளியும் படிப்படியாக எம்மைப் பெரிய வெள்ளிக்கு அழைத்துச் செல்லவேண்டும்.

மரண தண்டனை பெற்ற கிறீஸ்து சிலுவை சுமந்து செல்லவேண்டுமெனப் பணிக்கப்பட்டார். அச் சிலுவையின் பாதையிலே பல்வேறு கட்டங்கள்; அத்தனையும் செய்தி சொல்பவை.

கிறீஸ்துவின் சிலுவைப்பாதை அவருடைய பிறப்புடன் தொடங்கியதென்றுதான் துணியவேண்டும். ஆமாம், நடுங்கும் குளிரிலே, இரவின் தனிமையிலே, ஒதுக்கப்பட்ட சூழவிலே, அனாதையாக ஏழையாகப் பிறந்த அன்றே அவரின் சிலுவைப்பாதை—சிலுவை சுமக்கும் வாழ்க்கை தொடங்கிற்று.

ஆயினும் அவரது பாடுகளென்று இறுதிக் கட்டத்தை நோக்கினால், அப் பாடுகள் அவர் தமது சீடர்களுடன் ஒன்றாக அமர்ந்து உணவருந்திய பின்னர் பிரியாவிடையாக

இறுதிச் சொற்பொழிவாற்றிய பின்னர் கெத்சேமனி என்னும் தோட்டத்திற்குச் சென்றார்; ஒதுக்கத்தைத் தேடி. அங்கே தொடங்கியது அவரது பாடுகள். அங்கே நடந்தது என்ன? புனித மத்தேயு எழுதிவைத்துள்ளார்.

(மத்; 26 : 36 — 42)

ஓர் இனமறியாப் பயம் கிறிஸ்துவை ஆட்கொண்டது; தனக்குத் திமைவிளையப்போவதை அவரின் உள்ளுணர்வு உணர்த்தியது; தான் படப்போகும் பாடுகளை ஓரளவு தூர திருஷ்டிக்கண்கொண்டு பார்க்கிறார். உள்ளம் வேதனைப்படுகின்றது. தனிமையை விரும்புகிறார். ஆயினும், அருகில் துணையாகத் தமது சீடருள் மூவர் இருக்கவேண்டுமென ஆசிக்கிறார். உணர்வுகளின் போராட்டம்.

"இங்கே, இத் தனிமையில் என்னுடன் விழித்திருங்கள்" என்ற ஏக்கத்துடன் தம் சீடர் மூவரையும் கேட்டார். அத் தனிமையில், துன்பத்தில், ஏக்கத்தில், இறைவனுடன் ஒன்றிக்க விரும்பினார். அங்கு ஆழமான, பக்தியான, மனிதாபிமான செபமொன்று உருவாகியது.

அனைத்து மனிதர்களையும் போன்று அவரும் செபித்தார்; அத் துன்பம், அக் கஷ்டம் அந்த நேரத்தில் தன்னைவிட்டு அகலட்டும் என்றுதான் வேண்டினார். ஆனால், எம்மை அவர் மிஞ்சியது அச் செபத்தின் இரண்டாவது பகுதியில்;

"என் விருப்பமன்று, உமது விருப்பப்படியே ஆகட்டும்" என்றார்.

இறைவன் விருப்பம் எதுவோ அதைச் சாதிப்பதே தமது செயலென்று வாழ்ந்தவர் கிறிஸ்து.

## ஆண்டவன் விருப்பத்திற்கு அடிபணிவதுதான் செபம்

நாமும் செபிப்பதுண்டு; உண்மையிலேயே நாம் செபிக்கிறோமா? நூல்களில் உள்ள செபங்களைச் சொல்லுகின்றோம். அன்றேல் மனப்பாடம் செய்து ஒப்புவிக்கின்றோம்; இது செபமா? வாழ்க்கையுடன் தொடர்புகொண்ட வழிபாடா?

நாம் ஏன் கோவிலுக்குச் செல்கிறோம்? எமக்கு நன்மைகள் கேட்பதற்கு; "நான் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்; எனக்கு வேலை கிடைக்கவேண்டும்; வீடு கிடைக்க வேண்டும். நோய் வராமல் இருக்கவேண்டும், வெளிநாடு

போகவேண்டும்: எனது வழி என்றுமே தங்கு தடையின்றி, வளமோடும், வனப்போடும், என் விருப்போடும் வளரவேண்டும்." இதுவா செபம்?

"கிறீஸ்துவின் செபத்தை நோக்குங்கள். அவர் என்ன கேட்டார்?

"கூடுமானல் இத்துன்பம் என்னைவிட்டு அகலட்டும்" என்று எங்கள் எல்லோரையும் போன்றுதான் கேட்டார்.

"ஆனல், என் விருப்பப்படியன்று உமது விருப்பப்படியே ஆகட்டும்" என்று கூறி எம்மைவிட உயர்ந்துவிட்டார்.

இறைவன் விருப்பத்தை ஏற்று வாழ்வதே கிறீஸ்தவ வாழ்வு. ஆண்டவன் சித்தத்துக்கு அடிபணிந்து பிரச்சினைகளில் ஈடுபட்டு, துன்பங்களை அனுபவித்து, அவற்றினூடாக வாழ்க்கையில் நிறைவு காண்பதே கிறீஸ்தவ வாழ்வு.

## மூன்ருவது கட்டம்:

# கிறீஸ்துவைக் கொஞ்சியே வஞ்சித்தான் யூதாஸ்

இயேசுவின் சீடர்களில் ஒருவரான யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுக்கிறன். இந்தச் சம்பவத்தை இயேசுவின் இன்னெரு சீடரான புனித மத்தேயு எழுதிவைத்துள்ளார்; (நற்செய்தி — மத். 26: 47 — 49)

யூதாசின் போக்கு அவ்வளவு தெளிவாகப் புரியவில்லை; அவரது வாழ்க்கை சற்று அலசி ஆராயப்படவேண்டியது.

ஏனைய பதினெரு சீடர்களைப்போலவே யூதாசும் மூன்ருண்டுகளாக இயேசுவுடன் ஒன்ருகவே கூடித்திரிந்தவர். அவர்களோடு உண்டு, உறவாடி, உரையாடி, உறங்கி வாழ்ந்தவர்.

இயேசுவின் புதுமைகளைக் கண்டு வியந்தவர்: போதனைகளைக் கேட்டு மகிழ்ந்தவர்; கதைகள், உவமைகளுக்கு விளக்கங்கள் கேட்டுப் புரிந்தவர். அவரை ஏற்றுக்கொண்டு அவரின் சீடராக வாழ்ந்தவர்;

பன்னிரு சீடருள் யூதாஸ்தான் பொருளாளராக நியமிக்கப்பட்டாராம்.

மூன்றாண்டு வாழ்க்கையை வைத்துப் பார்க்கும்பொழுது யூதாசுக்குப் பணத்தின்மீது ஆசை சற்றுக் கூடவே இருந்ததாகத் தெரிகிறது.

அதையும் அவர் தனக்காகச் செய்யவில்லை; வறியோர்பால் அன்புகொண்டு, அவர்களுக்கு உதவவேண்டுமென்ற நல்லெண்ணத்துடன்தான் அவர் பணத்தின்மீது கொஞ்சம் கவனமாக இருந்தார்.

மேரி மக்டலின் கண்ணீரால் கிறீஸ்துவின் பாதங்களைக் கழுவி, பரிமளதைலத்தால் அப் பாதங்களைத் தடவி, தன் பாவங்களுக்கு மன்னிப்புக் கேட்டபொழுது யூதாசுக்கு ஒரே எரிச்சலாகவே இருந்தது. அத் தைலத்துக்குச் செலவுசெய்த பணம் வீணாகிவிட்டதென்று எண்ணினார். அச் செலவு வீண் செலவு என்று சொன்னார்.

அல்லது அப்பெண்மணி தனது கால்களைக் கழுவவில்லை என்ற பொறாமை உணர்ச்சியோவும் தெரியாது!

பணத்தின்மீது யூதாசுக்கிருந்த பலவீனத்தைப் பரிசேயரும், தலைமைக் குருக்களும் அறிந்திருக்கவேண்டும். அப் பலவீனத்தைப் பயன்படுத்தி, பணத்தைக் கொடுத்து, கிறீஸ்துவைத் தனியாக, சரியான சூழலில் பிடித்துத்தருமாறு கேட்டிருக்கிறார்கள்,

பணம் பெற்றவன் காட்டிக் கொடுத்தான். யாரை? மூன்றாண்டு காலம் ஒன்றாகக் கூடி வாழ்ந்தவரை! உரையாடி உறவாடி வாழ்ந்தவரை! தன்னிகரற்ற தலைவராகத் திகழ்ந்தவரைக் காட்டிக்கொடுத்தான்.

அதையும் கொஞ்சியே செய்தானே! ஆமாம், கொஞ்சியே வஞ்சித்தான். வஞ்சகன் அவன்.

இன்னொரு இடத்தில் பணப்பசையைக் கண்டவுடன், தன் நண்பனைத்—தலைவனைக் காட்டிக்கொடுத்தான் யூதாஸ்.

இவரால் இனி ஒன்றும் ஆகாது—இவரது துணையோ உதவியோ இனித் தேவைப்படாது என்ற ஒரு வெறுமை உணர்வில் புதிய உறவுகளை, பயனுள்ள உறவுகளை வார்க்க அவன் இயேசுவைக் காட்டிக்கொடுத்தான்.

பரிசேயரும், தலைமைக் குருக்களும் இயேசுவைப்பிடித்து அரசனுக்குவார்கள் என்றும் யூதாஸ் எண்ணியிருக்க முடியும்.

இயேசு அரசனுனல் பொருளாளராகவிருந்த யூதாசுக்கும் ஒருபெரும் பதவி கிடைக்குமென்று அவன் எண்ணியிருக்க வேண்டும்.

எப்படிப் பார்த்தாலும் அவனது சுயநலம் அவனை இச் செயலுக்குத் தூண்டியிருக்க வேண்டும். யூதாஸ் வரலாறு படைத்துவிட்டான். அன்று தொட்டுக் காட்டிக் கொடுப்பவர்களையெல்லாம் யூதாஸ் என்று அழைக்கும் அளவிற்கு அவனது பெயர் வரலாற்றில் நிலைத்துவிட்டது.

இயேசுவின் பெருங்கவலை – பெருஞ்சுமை இக்காட்டிக் கொடுத்தலாகும். அதனுலேயே சோர்வும், சுமையும், கனமும், துன்பமும் கலந்த தொனியில்

"நண்பனே முத்தமிட்டோ மனுமகனைக்
காட்டிக் கொடுக்கிருய்?" என்ருர்

சீடர்களுள் ஒருவனே இந்த வஞ்சகச் செயலைச் செய்தானே என்ற எண்ணம் இயேசுவின் சுமையானது. அது அன்று நடந்தது. இன்று...நாமும் அயலவரைக் காட்டிக் கொடுக்கவில்லையா?

## காட்டிக் கொடுக்கிருேம்:

பண்பும், பாசமும், அமைதியும், அடக்கமும் கொண்ட பெற்றேரின் பிள்ளைகள் தங்கள் பேச்சால், வாழ்க்கையால் துரோகம் செய்யும் பொழுது பிள்ளைகள் பெற்றேரைக் காட்டிக் கொடுக்கவில்லையா?

கடமையும் கண்ணியமும் கொண்டு மாணவர்களை உருவாக்கப் பெருமுயற்சி எடுக்கும் ஆசிரியர்களுக்கு பண்பாடற்ற, ஒழுக்கமற்ற மாணவர்களால் சுமைதான் ஏற்படுகிறது. இங்கு மாணவர்கள் தங்கள் ஆசிரிய ஆசிரியைகளைக் காட்டிக் கொடுக்கவில்லையா?

நண்பர்களாக, சகோதரங்களாக வாழ்ந்தவர்கள் சிறு பிரச்சினையொன்று வந்ததும் அப்பிரச்சினையை நேரடியாகப் பேசி அலசி ஆராய்ந்து தீர்த்துக் கொள்ளாமல், ஆவலாதி அவதூறு பேசுவதும், மற்றவர்களுடைய வாழ்க்கையை நாசமாக்குவதும், பழிவாங்குவதும் காட்டிக்கொடுத்தல்தானே!

நாட்டின் பணத்தில் படித்து பட்டம் பெற்றுவிட்டு, தங்கள் சொந்த வசதிகளுக்காக வெளிநாடு சென்று வேலை செய்வது கூட ஒருவகையில் காட்டிக் கொடுத்தல்தானே !

ஒருவனிடம் பெற வேண்டிய உதவிகள், சலுகைகள் அனைத்தையும் அட்டைமாதிரி உறிஞ்சி எடுத்து விட்டு வேண்டாத வேளையில் அவனை ஒதுக்கிவைத்துச் செல்வதும் ஒருவகைக் காட்டிக் கொடுத்தல்தானே !

இப்படியே அடுக்கிக் கொண்டே போகலாம்; இது என்னத்தைக் காட்டுகின்றது ?

எமது அன்றாட வாழ்க்கையில் நாம் எமது பெற்றோரை, நண்பர்களை, கூடவாழ்வோரை, ஆசிரியரை, நமக்கு நன்மை செய்தோரைக் காட்டிக் கொடுக்கின்றோம், வேண்டாத சிலுவைகளை மற்றவர்கள்மேல் சுமத்துகின்றோம்; நாமே இன்றைய யூதாசுகளாக மாறுகின்றோம்; இதுதான் கிறித்தவமா ?

## நான்காவது கட்டம்:

# கிறீஸ்துவின் தலைமைச் சீடன் கிறீஸ்துவை மும்முறை மறுதலித்தான்

அவரது பன்னிரு சீடர்களுள் முதன்மையான சீடன், அவன் என்ன செய்தான் ? அவனும் தன் தலைவனுக்குத் துன்பம் விளைவித்தானா ?

வரலாறு முதலில் செய்தி சொல்லட்டும்; கிறிஸ்துவின் இன்னொரு சீடனாகிய புனித மத்தேயு வரைந்து தந்துள்ளார்:
(மத். 26 : 69 — 74)

சீடர்கள் பன்னிருவர், கிறிஸ்துவுக்கு. ஒருவன் கொஞ்சியே வஞ்சித்தான், அவன் பெயர் யூதாஸ்; இன்னொருவன்— நம்ப முடியவில்லை நடந்தவற்றைக் கேட்டால்; இவர் பெயர் இராயப்பர்—பீற்றர் என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள், அவரை;

சீடர்களுள் முதன்மையான சீடன், தலைமைச்சீடன், பல பொறுப்பான பதவிகளைக் கொடுக்கக் காலத்தைப் பார்த்துக் காத்திருந்தார், கிறீஸ்து.

கெத்சேமெனித் தோட்டத்தில் கிறீஸ்துவைப் பிடிக்க வந்த போர்வீரர்களை எதிர்த்து நின்ற சீடன்: ஒருவனின் காதை வெட்டிய துணிவுகொண்ட வீரன், அவன்;

அதேவீரன் கிறீஸ்து கைதுசெய்யப்பட்டதும் கோழையாகிவிட்டான். அவருக்கு என்ன நேருமோ என்று அறிய ஆவல்கொண்டு அவர் பின்னாலேயே மறைந்து மறைந்து அரண்மனை சென்றார், இராயப்பர்; மூன்று வருடங்களாக ஒன்றாக வாழ்ந்து அன்புசெய்தபின் இப்பொழுதுமட்டும் அந்த அன்பு வற்றிவிடுமா?

ஆனால், இராயப்பர் எது நடக்கக்கூடாதென்று விரும்பினாரோ அது நடந்தது. அரண்மனையில் மாறிமாறி மூவர் இராயப்பரை அடையாளங் கண்டுகொண்டார்கள். அதை வெளியே சொன்னதும் தனது உயிருக்காக அஞ்சினார், இராயப்பர். உடனேயே அந்தக் கலிலேயனை—அந்தக் கிறிஸ்துவைத் தனக்குத் தெரியாதென்று மறுத்துச் சொல்லிவிட்டார். ஒருமுறையல்ல, இரு முறையல்ல' மும்முறைகள் மறுத்துச் சொன்னார்.

மூன்றாண்டுகளாகப் பழகியவரை—நட்புக்கொண்டவரை—மூன்றே முறைகளில் முற்றாகத் துறந்தாரே! என்னே கொடுமை இந்தச் சிலுவைகள்—இந்தச் சுமைகள் இவைதான் கிறீஸ்துவின் சிலுவைகள். அவரது துன்பங்கள். அவர் அனுபவித்த கொடிய பாடுகள்.

## நாமும் மறுதலிக்கிறோம்

இன்று மட்டும் நாம் அக் கிறிஸ்துவை மறுதலிக்கவில்லையா? தெரியாதென்று கூறவில்லையா?

அன்பு செய்ய மறுக்கும்பொழுது, நீதி வழங்கத் தயங்கும்பொழுது, உண்மைபேசக் கூசும்பொழுது கிறீஸ்துவைத் தெரியாதென்றுதானே கூறுகின்றோம்.

மன்னிக்க மறுக்கும்பொழுது, அயலவர் உணர்வுக்கு இடங் கொடாத பொழுது, சமுதாய உணர்வைப் பெறாத பொழுதெல்லாம் கிறீஸ்துவைத் தெரியாதென்றுதானே கூறுகின்றோம்;

எமக்காகத் துன்புற்ற கிறீஸ்துவின் பாடுகளையிட்டுத் தியானிக்கும் இந் நாட்களில் எம்மை இட்டுச் சிந்திக்கவேண்டியதும் அவசியம். எமது வாழ்க்கையையிட்டுச் சிந்திக்கவேண்டும். அவ்வாழ்க்கை எவ்வளவு தூரம் கிறீஸ்தவ வாழ்வென்று அலசிப்பார்க்கவேண்டியது அவசியம்.

## ஐந்தாவது கட்டம் :

# பிலாத்து கிறீஸ்துவுக்கு அளித்த தீர்ப்பு

கிறீஸ்து பிலாத்து முன்நிலையில் கைதியாகக் காட்சி தருகிறார். வரலாறு சொல்கிறது கேளுங்கள். வரலாற்று ஆசிரியர் கிறீஸ்துவின் அன்புச் சீடன் அருளப்பர் (ஜோன்) என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள்; (அரு. 19 : 1 - 16)

படைத்தோன் படைக்கப்பட்டவன் முன்நிலையில் கைதாகி நிற்கிறான். தீர்ப்புச்சொல்ல வேண்டியவர் தீர்வைக்காகக் காத்திருக்கிறார்; அதிகாரத்தைக் கொடுத்தவர் அதிகாரத்துக்கு அடி பணிந்து அமைதியாக நிற்கிறார்.

பிலாத்து அதிகாரமுள்ள மன்னன். தனக்கு அதிகாரம் இருப்பதாக அவனே பெருமை பேசினன். கிறீஸ்துவைவிடுவிக்கவோ அன்றேல் சிலுவையில் அறைந்து கொல்லவோ தனக்கு அதிகாரம் உண்டென்று அறைகூவினன்.

அப்படிப்பட்ட மன்னன்தான் கிறிஸ்துவின் வழக்கை விசாரித்தபின்னர் குற்றமேதுமில்லை என்று கூடிநின்ற மக்களுக்கு உறுதியுடன் சொன்னன்.

ஆனல், விடுவிக்கவில்லை கிறீஸ்துவை; இது ஏன் ?

மக்கள் மாக்களானார்கள்; மக்கள் தலைவர்களென்று தம்மைத்தாமே தலைவர்களாக்கிக் கொண்டவர்கள், மதத்தலைவர்கள் இருசாராரும் ஒன்றுசேர்ந்து மக்கள் மனங்களை மாற்றிவிட்டார்கள். மாறிய மக்கள் கிறீஸ்துவைக் கொல்லும்படி கேட்டார்கள்.

இதே மக்கள்தான் கிறிஸ்துவை மன்னனாக்க வேண்டு மென்று வீதிதோறும் ஓலமிட்டுச் சென்றவர்கள். இப் பொழுது மனம்மாறி அவரின் உயிரைக் குடிக்க வெறி கொண்டு நின்றார்கள்.

பட்டத்தையும் பதவியையும் காப்பாற்ற விரும்பிய பிலாத்து கைகழுவிவிட்டான். "பிரச்சினை எனதல்ல" என்று கைகழுவினான். இனி வழக்குக்குத் தீர்ப்புத் தரத் தனக்குத் தெரியாதென்று கைகழுவினான். பொறுப்புணர்ச்சி யிலிருந்து கை கழுவிவிட்டான். அதிகாரம் இருந்தும் அவ்வதி காரத்தைப் பயன்படுத்தாமல் கைகழுவிவிட்டான். அவன் மன்னனா? அவன் நீதியுடன் செங்கோல் ஏந்திய அரசனா!

நாம் மட்டும் உயர்ந்தவர்களா? பொறுப்புணர்ச்சியிலி ருந்து நாம் கை கழுவுவதில்லையா? நீதி வழங்கவேண்டிய சூழலில் ஒதுங்கி விடுவதில்லையா? சொல்லவேண்டியவற்றைச் சொல்லாமல் நழுவி விடுவதில்லையா? செய்யவேண்டியவற் றைச் செய்யாமல் நழுவி ஓடிவிடுவதில்லையா?

## ஆறாவது கட்டம்:

# தனது சிலுவையைத் தானே சுமக்கிறார், கிறிஸ்து

(மத். 27: 27—31)

கிறிஸ்து அடிபட்டு, உதைபட்டு முள்முடி பெற்று வசை பட்டு, சபிக்கப்பட்டு, எள்ளி நகையாடப்பட்டு, அடிமை யாக நடத்தப்பட்டுக் கல்வாரி மலைமட்டாகச் சிலுவை சுமத் தப்பட்டார்.

கிறிஸ்து சுமந்த சிலுவை வெறும் மரத்தால் செதுக்கப் பட்ட சிலுவையல்ல, வெறும் மரச்சட்டங்களினாலான சிலு வையெனில் யாரும் சுமந்துவிடலாம், சற்றுத் தேகபலம் இருந்துவிட்டால். அது புறத்துச் சுமைதரும் சிலுவை.

இயேசு உண்மையிலேயே இப்படி ஒரு மரத்தினால் செதுக் கப்பட்ட சிலுவை ஒன்றைச் சுமந்தார். ஆனால், அவர் சுமந்த அச்சிலுவையினூடாக நாம் அவரின் ஆழமான அகச்சிலு

வையைப் பார்க்கின்றோம்: அச்சிலுவை புறச்சிலுவையை விடப் பாரமானது, கனமானது, சுமையானது:

அவரது போதனையைக் கேட்டு, சாதனையைப் பார்த்து வியந்து, அவர் பின்னால் சென்ற மக்கள் அவருக்காக வாதிட வரவில்லை:

முரணாக அவரை மன்னனாக்க வேண்டுமென்று துடியாய்த் துடித்து 'ஓசான்னா' என்று பாடிச் சென்ற அதே கூட்டம், பிலாத்துவின் முன்னிலையில் பரிசேயர், தலைமைக் குருக்களின் வஞ்சகத் தூண்டுதலால் இரவோடிரவாக நெஞ்சம் மாறி இயேசுவைக் கொலைக்கனுப்ப வெறிகொண்டு ஓலமிட்டு, ஊளையிட்டது. அது நரிக்கூட்டமா? அல்லது நன்றி கெட்ட வஞ்சகக் கூட்டமா?

மூன்றாண்டுகள் கிறீஸ்துவைப் போற்றிய வாய்கள் மூன்று மணித்தியாலங்களில் முற்றாக மாறித் தூற்றினவே, அன்று வாழ்த்திய நெஞ்சங்கள் இன்று வசை மொழியை வாரியிறைத்தனவே. இதைவிட ஒரு பெரிய சிலுவை வேண்டுமா?

அவரால் குணப்படுத்தப்பட்டவர்களே, நன்மைகள் பல பெற்றோர் இன்று அவருக்கு ஆறுதல் சொல்ல முன்வரவில்லை. இந்த நன்றி கெட்ட நாய்த்தனந்தானே அவரது சிலுவையாக மாறி உள்ளத்தை உறுத்தியது.

மூன்று வருடங்களாக வீதி வீதியாகத் திரிந்து நற்செய்தி சொன்னவர் கிறீஸ்து; அதுமட்டுமல்ல, பல நன்மைகள் பயக்கும் புதுமைகளையும் மக்கள் நலன் நாடிச் செய்தவர்;

ஆமாம், குருடர்களுக்குப் பார்வை கொடுத்தார், தான் சிலுவை சுமந்து செல்லும் இக்கோரக் காட்சியைப் பார்ப்பதற்காகவா?

செவிடர்களுக்குக் கேள்வி கொடுத்தார், தான் சிலுவை சுமந்து செல்லும் அலங்கோலத்தைக் கண்டு மக்கள் சொல்லும் வசை மொழியைக் கேட்டு இன்புறவா?

இறந்தோரை உயிர்ப்பித்தார், சிலுவை சுமந்து செல்லும் அப்பரிதாபக் காட்சிக்குச் சான்று பகரவா?

வறியோர்—எளியோர் அனைவருக்கும் நற்செய்தி சொன்னார், சிலுவை சுமக்க வேண்டுமென்ற இத் தண்டனையை அதே மக்களிடமிருந்து அவலச் செய்தியாகப் பெறவா?

"சுமை சுமந்து சோர்ந்திருப்போரே, என்னண்டை வாருங்கள்; நான் உங்களைத் தேற்றுவேன்," என்று ஆறுதல் வார்த்தை சொன்னாரே, அதே மக்களிடமிருந்து இச்சுமையைப் பெறவா?

இந்த நன்றி கெட்டதனம், தங்களைத் தாங்களே நல்லோர் என்று கூறிக்கொள்வோர் ஒதுங்கி நின்று பார்க்கும் தன்மைதானே அவரைத் துன்பப்படுத்தியது! துயரப்படுத்தியது! கொடுமைப்படுத்தியது! இதயத்தில் கனத்தது! நெஞ்சத்தில் பழுவானது! உள்ளத்தில் சுமையானது!

## எமது சிலுவை

இவற்றை விடவா அந்தமரச் சிலுவை பாரமாகத் தோன்றும்? இன்றைய உலகில் நாம் சுமக்க வேண்டிய சிலுவையும் இதுதானே?

எம்மிடமிருந்து உதவிகள் பெற்றோர், எமக்கு உதவ வரவில்லையே! எம்மிடமிருந்து நன்மைகள் பெற்றோர் எமக்கு நன்றிக் கடன் செலுத்த வரவில்லையே!

அன்பிற்கு அன்பைக் காணவில்லையே; சேவைக்குச் சேவையைப் பார்க்க முடியவில்லையே! கிட்ட நின்று பழகினவர்கள் கூட எட்டச் சென்று விடுகிறார்களே!

இவை நாம் அன்றாடம் சுமக்க வேண்டிய சிலுவைகள். அதே வேளை நாம் அயலவர் மீதும் சுமத்தும் சிலுவைகளும் உண்டல்லவா?

அழிக்கும் கொடிய வறுமையைப் பார்த்தும் பார்க்காமல் இருக்கின்றோமே! அநீதி, ஊழல், பழிவாங்கல்கள் போன்றவற்றைப் பார்த்தும் பார்க்காமல் இருக்கின்றோமே! இன்னும் ஒருபடி மேற்சென்று நாமே அத்தீமைகளுக்குக் கைகொடுத்து உதவுகின்றோம்.

கினுதுமை, மக்கோனா போன்ற இடங்களுக்கு சிலுவைப் பாதை செய்யத் திருயாத்திரை செல்லுகின்றோம்; ஆனால், வீட்டிலும் பங்கிலும் அன்றாட வாழ்க்கையிலும், கடமை செய்யாது, வந்த சிலுவைகளை நகர்த்தி வைத்துத் தப்பிச் செல்லுகின்றோம்.

சிலுவைகளை அயலவர்மேல் சுமத்தாமல் வாழ்வதுடன், எமக்கு மேல் சுமத்தப்படும் சிலுவைகளை இறுதிவரை நாம் சுமந்து செல்லவும் வேண்டும். இது தானே கிறிஸ்தவ வாழ்க்கை?

**ஏழாவது கட்டம்:**

# கிறீஸ்துவுக்குக் கைகொடுத்த சீரேனே ஊரானகிய சீமோன்

(லூக். 23: 36)

இயேசுவின் மரச்சிலுவை அவருக்குக் கனத்தது. சுமையாக இருந்தது. மரச்சிலுவை புறச் சுமையைக் கொடுத்த வேளையில் அவரின், அகச்சிலுவை தான் அவரை நடக்க முடியாமல் செய்திருக்க வேண்டும்.

இருப்பினும் அவர் செல்லவேண்டிய இடம் கொல்கொத்தா மேடு அங்கு செல்லுமுன் அவர் எழும்பமுடியாமல் விழுந்து விட்டால் அல்லது மரணமடைந்து விட்டால் காவலர்தான் சிலுவையையும் அவரையும் சுமக்க வேண்டும். காவலர் அதை ஒருபொழுதும் விரும்பமாட்டார்கள். சுமைகளையும், சிலுவைகளையும் பாமர மக்களுக்குக் கொடுத்துப் பழகினவர்களே ஒழிய மக்களின் சுமைகளைக் குறைத்துப் பழகினவர்கள் அல்ல அவர்கள்.

ஆகவே, வீதி வழியே சென்ற ஒருவனை வற்புறுத்தி இயேசுவின் சிலுவையைச் சுமக்க வைத்தனர்.

சீரேன் நாட்டானகிய சீமோன் தொடர்ந்து அச்சிலுவையைச் சுமக்க உதவியதாக வரலாறு சொல்லுகிறது.

ஆனல், அவனின் மனப்போக்கை எடுத்துச் சொல்லவில்லை. அவனும் கிறிஸ்துவின் பால் அனுதாபப்பட்டு, மனமிரங்கி நல்மனதுடன் சுமந்தான, அன்றேல் காவலரின் கட்டாயத்திற்கு அடிபணிந்து வெறுப்புடன் சுமந்தான, என்பது தெரியவில்லை.

இங்கு எமது சிந்தனைக்குப் பொருள் உண்டு. எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சிலுவை உண்டு சுமப்பதற்கு, நமது இறுதி முடிவு மட்டாக அச்சிலுவையைச் சுமந்தே ஆகவேண்டும். நானே சுமக்க வேண்டிய சிலுவை உண்டு. அதேவேளை அயலவரின் துணையுடன் சுமக்க வேண்டியும் ஏற்படலாம்.

### பொதுச் சிலுவைகள்

தனிச்சிலுவைகளுடன் பொதுச்சிலுவைகளுமுண்டு. ஒரு நாட்டின், ஒரு சமூகத்தின், ஒரு பங்கின் ஒருவீட்டின் சிலுவைகளும் உண்டு; நாம் கைகொடுத்து உதவக் கடமைப் பட்டவர்கள். அப்பொறுப்பு எமக்கு உண்டு. ஒரு வீடுவளர, ஒரு பங்கு வளர, ஒரு சமூகம் வளர, ஒரு நாடு வளர நாம் கைகொடுக்க வேண்டும். பொதுப் பிரச்சினைகளைத் தீர்க்க நாமும் துணை செய்யவேண்டும்.

இந்த சமுதாய விழிப்புணர்ச்சி அவசியம் வேண்டும், காவலரின் வற்புறுத்தலின்றி, ஆள்வோரின் சட்டங்களின்றி நாமாக உணர்ந்து ஊழல்களை அகற்ற,சாதிமத வேறுபாடுகளை அகற்றி, ஏற்றத்தாழ்வுகளைத் தகர்க்க நாம் செய்யவேண்டிய எமது பங்கு உண்டு.

அநீதியை அழித்து நீதியை நிலைநாட்ட, பொய்மையைப் பொசுக்கி உண்மையை உணர்த்த, பகைமையை அகற்றி அன்பை விதைக்க, பழிவாங்கலையும் பொறாமையையும் ஒழித்து நேர்மையை வாழவைக்க நாம் ஒவ்வொருவரும் செயற்பட வேண்டும்;

தனியாக இச்சிலுவைகளைச் சுமக்கமுடியாது, ஆனால், நாலுபேர்கள் சேர்ந்தால் சிலுவைகளின் சுமைகள் குறையுமல்லவா?

### எட்டாவது கட்டம்:

## கிறீஸ்துவில் அனுதாபம் கொண்டு கண்ணீர்விட்ட யெருசலேம் பெண்கள்

(லூக். 23: 27—31)

துன்பத்தைப் பார்த்து இளகிய மனங்கள் இரக்கப்படுவது இயல்பு; அதுவும் இளகிய மனதுடையோர் மெல்லினத்தைச் சேர்ந்தோராயின் கண்ணீர் விடுவதும் உண்டு.

சாதாரண திரைப்படத்தில் வறுமையைக் கண்டு, கொடுமையைக் கண்டு கண்ணீர் விடும் பெண்கள் இருக்கிறார்கள் தானே.

வழியில் பிச்சைக்காரனின் அலங்கோலத்தைக் கண்டு, அநியாயமாக ஒருவன் தாக்கப்படுவதைக் கண்டு பெண்கள் கண்ணீர் சிந்துவதைக் காண்கிறோம்.

யாரோ வீட்டில் யாரோ இறக்க அக்கம் பக்கம் எல்லாம் கூடி அழுவதையும், கூலிக்கு அழுவதையும் கண்டவர்கள், நாங்கள்.

ஆகவே, யெருசலேம் பெண்கள் வேடிக்கை பார்க்க வந்து கிறிஸ்து கொண்ட கோலத்தைக் கண்டு அழுதது பெரிய ஆச்சரியமல்ல.

அவர்கள் என்னத்தை எண்ணி அழுதார்களோ? அதிலும் என்ன மனஆறுதலைக் காண விரும்பினார்களோ! இன்றைய உளஇயலாளரைக் கேட்டால் கதை கதையாகப் பல அக உண்மைகளை உணர்த்துவார்களே. ஆகவே, யெருசலேம் பெண்கள் அழுதார்கள் என்பதைவிட, அந்த அழுத பெண் களைக் கண்ட யேசு அவர்களுக்கு என்ன சொன்னார் என்பது எமது சிந்தனையைத் தூண்டுகிறது.

"யெருசலேம் பெண்களே! எனக்காக அழாதீர்கள்; உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்றார்.

அவருடைய பொருள் பொதிந்த வார்த்தைகள் ஆழமானவை, கூர்மையானவை.

"அழாதீர்கள்" என்று ஆறுதல் சொல்லவில்லை, "அழுங்கள்" என்றுதான் சொன்னார். அவர் இந்த நிலைக்கு வந்ததற்குக் காரணம் என்ன? மக்களின் பாவங்கள், மக்களின் மறைக்கப்பட்ட மனச்சாட்சிகள். நீதியின் பெயரால் அநீதியை ஆட்சி செய்யவிட்ட தன்மைகள்: பெயரையும், செல்வாக்கையும், பட்டத்தையும், பதவியையும், அமைப்பையும், நிர்வாக ஒழுங்கையும் காப்பாற்ற மனித உயிர்களையே குடிக்கும் மனிதாபிமானமற்ற உணர்வுகள் - உறவுகளால் வந்த விளைவு.

இவற்றுக்காக அழுங்கள். இவை ஒருவர் செய்த குற்றமல்ல. ஒரு சமூகம் செய்த குற்றம்; பரம்பரை பரம்பரையாக இப்படிப் பழக்கப்பட்டுவந்த காரணத்தால் விளைந்த குற்றம். அதற்காக அழுங்கள்.

இன்றும் அவர் எம்மைப் பார்த்துச் சொல்லும் பயங்கர மான வார்த்தைகள் அவை.

"அழுங்கள். உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக் காகவும் அழுங்கள்"

கோயிலில் வழிபாடு; வீட்டில், வீதியில், வாழ்க்கையில் அயலவனையிட்டு ஆவலாதி அவதூறு.

மேடையில் சமத்துவம் — வாழ்க்கையில் பாகுபாடுகள் பாராட்டல்; இவற்றைப் பார்த்து உங்களுக்காகவே அழுங் கள்.

பிச்சைக் காரனைப் பார்த்து அழாதீர்கள். அவனைப் பிச்சைக்காரனாக்கிய சமூக அமைப்பைப் பார்த்து அழுங்கள்.

ஊழல்களையும், பழிவாங்கல்களையும், அநீதிகளையும், சாதி மத வெறிகளையும், போலி வழிபாடுகளையும் பார்த்து அழா தீர்கள். அவற்றையெல்லாம் பார்த்து அனுமதித்து ஏற்றுக் கொண்டு வாழும் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் எண்ணி அழுங்கள்.

ஒன்பதாவது கட்டம்:

# மன்னித்து உயர்ந்த மனுமகன் கிறீஸ்து

(லூக். 23: 33—34, 39—43)

வரலாற்றில் நடந்த உண்மைச் சம்பவங்களை நாம் மீட்டுப் பார்ப்பது வெறும் சரித்திரம் படிப்பதற்கல்ல; இன்று வாழும் நாம் அன்றைய வரலாற்றைச், சம்பவங்களை மீட்டுப் பார்க் கின்றோம், அச்சம்பவங்கள் இன்று எமக்கு விரித்துரைக்கப் படவும், இன்றைய வாழ்க்கையோடு ஒப்பிடப்படவும், அத னால் நாம் நாளைய வரலாற்றைப் படைக்கவுமே, ஆகவே, இது வெறும் வரலாறு மட்டுமல்ல.

இன்று வாழ் எம்மில் சிந்தனையைத் தூண்டி எமது வாழ்வைப் பொருளுடையதாக்க, அர்த்தமுள்ளதாக்க, பய னுள்ளதாக்க, நிறைவுள்ளதாக்கவே.

கல்வாரி மேட்டுக்குக் கிறீஸ்து வந்துவிட்டார்; வர வேண்டிய இடத்துக்கு வந்தாயிற்று.

திட்டமிட்டபடி இயேசுவைக் கொல்ல நேரம் வந்துவிட்டது. அவர் சுமந்த சிலுவையிலேயே அவரை அறைந்தார்கள். அக்காலத்தில் மரண தண்டனை கொடுக்கும் முறையே அதுதான்.

கைகளையும், கால்களையும் நீட்டி, மரத்தோடு சேர்த்து ஆணிகள் கொண்டு அறைந்தார்கள்.

இந்த மரண தண்டனையைப் பெறுவதற்கு அவர் செய்த குற்றம் என்ன? இத்தீர்வைக்கு ஆளாவதற்கு அவர் இழைத்த தவறுகள் என்ன?

யாரிடம் கேட்பது? நீதி வழங்க வேண்டிய மன்னனே தனது பொறுப்பிலிருந்து கை கழுவியபின் யாரிடம் நீதி கேட்பது?

வேலிகளே பயிரை மேயும் பொழுது பயிரை எப்படிப் படரவைப்பது?

இத்தனையையும் அனுபவித்தவர் என்ன செய்தார்? கோபங் கொண்டாரா? சினங்கொண்டாரா? விரக்தி அடைந்தாரா? நம்பிக்கை இழந்தாரா?

பொறுப்பற்ற மன்னனையும், போர் வீரரையும் திட்டித் தீர்த்தாரா?

பழிக்குப் பழிவாங்குவது அவரது பழக்கமல்ல. அது கிறீஸ்துவின் கிறீஸ்தவப் பண்பாடுமல்ல.

ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டச் சொன்னவர், கிறீஸ்து. இந்த உவமை கொண்டு பொறுமையைப் போதித்தவர் கிறீஸ்து.

ஒரு முறையல்ல—ஏழேழு முறைகள் மன்னிக்கச் சொன்னவர், கிறீஸ்து; அதாவது மன்னிப்பதற்கு எண்ணிக்கையில்லை என்று எடுத்துரைத்தவர் இயேசு.

சொன்னதைச் செய்து காட்டியவர் இயேசு.

கல்வாரி மேட்டில் தன்னைக் கொன்று கொண்டிருந்தவர்களுக்காக அந்த வேதனையினூடாக, நன்றி கெட்ட மாந்தரின் நாய்ச் செயலினூடாக அவர் மனம் விட்டு மன்றாடினார்.

"தந்தையே! அவர்கள் அறியாமற் செய்யும் குற்றங்களை அவர்களுக்கு மன்னித்தருளும்," என்று உருக்கமாக மன்றாடினார்

போர் வீரர்கள் வெறும் தலையாட்டிப் பொம்மைகள். பெற்ற ஆணையைப் பக்தியோடு செயலாக்கும்—மனித உருவில் நடமாடும் இயந்திரங்கள்; அங்கு நீதி—அநீதி, நன்மை—தீமை,—அன்பு—ஆதரவு, பந்தம்—பாசம் எதுவும் கிடையாது.

மரண தண்டனை பெற்றவனுக்கு அத்தண்டனையை அணு அணுவாகக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். செஞ்சோற்றுக் கடன் செய்யும் கும்பகர்ணன் படையினர்.

## மன்னித்து உயர்ந்த மனுமகன்

அவர்களுக்காக இயேசு இறைவனிடம் செபித்தார். தான் அவர்களை மன்னித்தது மட்டுமல்ல இறைவனும் அவர்கள் பாவத்தை மன்னிக்க வேண்டுமென்று செபித்தார்.

"மன்னிக்கத் தெரிந்தவன் மாணிக்கக் கோயிலப்பா" என்றான் கவிஞன், கல்வாரி மேட்டில் மன்னிக்கத் தெரிந்த இயேசு மாணிக்கக் கோயில் மட்டுமல்ல, அக்கோயிலில் குடியிருக்கும் தெய்வமாக மாறிக் கொண்டிருந்தார்.

அவர் இறைவனின் மனித அவதாரம். அந்த மனித அவதாரம் இப்பொழுது மீண்டும் இறைவடிவம் பெறுகின்றது.

தவறு செய்யாதவர்கள் யாருமே இல்லை. தவறு செய்வது மனித பலவீனம். ஆனால், அதை உணர்ந்து ஏற்றுக் கொள்ளாமை மனித இறுமாப்பு. ஏற்றுக் கொண்டவன் மன்னிப்பை நாடவேண்டும். போலியாக அல்ல—வெளியரங்கில் அல்ல—உள்ளரங்கத்தில் செய்த தவறுக்காக வருந்தி—கண்ணீர் சிந்தி, யாருக்கெதிராகத் தீங்கிழைத்தோமோ அவர்களிடம் நேரடியாக மன்னிப்புக் கேட்க வேண்டும். அதுதானே உண்மையான மன்னிப்பு.

யாருக்கோ தீங்கிழைத்துவிட்டு கிறீஸ்துவிடம் மன்னிப்புக் கேட்பது கிறீத்தவமல்ல. அயலவனின் பெயரைக் கெடுத்-

துவிட்டு, அவன் குடியை அழித்துவிட்டு ஆண்டவனுக்குக் காணிக்கை கொடுப்பது கிறீத்தவமல்ல; செய்த தீமைக்கு பிராயச் சித்தம் செய், அதுதான் ஒப்புரவு. அதுதான் அறுந்த உறவை மீட்க வழி. இதுதான் கிறீத்தவ மன்னிப்பு; இது தான் கிறீத்தவ வழி.

கல்வாரியில் கிறீஸ்துவுடன் கொலைத்தண்டனை பெற்ற இருவரில் ஒருவன் மனந்திரும்பி தனது குற்றங்களுக்காக மன்னிப்புக் கேட்ட பொழுது கிறீஸ்து அவன் குற்றங்களை மன்னித்தது மட்டுமல்ல அவனுக்கு முழுமையான இன்பத்தையும் கொடுத்துவிட்டார்.

புனித இராயப்பர் தான் செய்த பாவத்துக்காக காலமெல்லாம் கண்ணீர்விட்டு வருந்தி, கிறீஸ்துவின் நற்செய்திக்கு சான்று பகர்ந்து வாழ்ந்துதான் புனிதரானார்.

யூதாஸ் மன்னிப்புக் கேட்கத் தவறி தன்னையேதான் அழித்துக் கொண்டான்.

யூதாஸ் காட்டிக் கொடுத்ததைவிட மன்னிப்புக் கேட்டு மனந்திரும்பி ஒப்புரவாக முனையாததுதான் பெருங் குற்றம் என்பது எமது எண்ணமாகும்.

சிந்தனை செய் மனமே. குற்றஞ் செய்தபின், அயலவனின் வாழ்வைப் பொறுமையினால் அழித்தபின் அவனிடம் மன்னிப்புக் கேட்டேனா? அல்லது குற்றம் எனதில்லை என்று இன்னும் வாதிடுகின்றேனா? ஆயிரங் காரணங்களைக் காட்டி செய்த குற்றத்தை மறைக்கின்றேனா?

இதய சுத்தியோடு, நெஞ்சில் நேர்மையோடு மன்னிப்புக் கேட்டு வந்தோரை மன்னித்தேனா?

பத்தாவது கட்டம்:

## தனது தாயை எமக்குத் தாயாக அளித்த கிறீஸ்து

(அரு. 19: 25—27)

சிலுவையில் அறைந்தவரை சிலுவையுடன் உயர்த்திக் கல்வாரி மேட்டில் நாட்டினர். வேதனையை அதிகரிக்க—செத்துக் கொண்டிருப்பவனை அணுவணுவாகச் சாகடிக்க அவர்கள்

கண்டுபிடித்த முறை—நாகரிகங்களுக்குத் தலைமைதாங்கிய பபிலோனியா—உரோமை நாகரிக நரகப் பழக்கமாக இருக்க வேண்டும்.

நாகரீகத்தில் உயரத்திலிருப்போர், சில வேளைகளில், சில மனிதர்கள் மட்டில் வெகு அநாகரிகமாக, மிருகத்தனமாக நடந்துகொள்வது இன்றும் உள்ளதுதானே!

அச்சிலுவையின் அடியில் நின்ருள் ஓர் இளம்பெண்; இல்லை, துணைவனையும் பறிகொடுத்து, தான் பெற்ற ஒரே செல்வ மகனையும் பறிகொடுத்துக் கொண்டு அக்கோரக்காட்சியையும் பார்த்துக்கொண்டு நின்ருள், அன்னை மரியாள்;

பத்து மாதம் சுமந்து—பாலூட்டிச் சீராட்டி வளர்த்து —பாதுகாப்புக் கொடுத்து வளர விட்டு, இன்று பரிதாபமாகக் கொலையுண்டதைக் காணுகின்ருளே!

ஒதுக்கப்பட்ட இடத்தில், பொல்லாத தனிமையில், நடுங்கும் குளிரில், வறுமையின் கோரப்பிடியில், மிருகத்தின் வீட்டில் பெற்றெடுத்த குழந்தையை, இன்றும் மீண்டும் சமூகத்தால் ஒதுக்கப்பட்டு, சபிக்கப்பட்டு அச் சமூகமே அவரைப் பொல்லாத தனிமையில் விட்டுக் கொடூரமாய், மிருகத்தனமாய்க் கொலைசெய்வதைப் பார்த்து நிற்கிருளே!

## அன்னையின் ஆக்க வழி

பெற்ற மனமல்லவா? பேசாமல் இருந்த மர்மம் என்ன?

அநீதியாகக் கொலையுண்ட கோவலனுக்காக வாதாடிய கண்ணகி மதுரையை எரித்தாள் என்பது இலக்கியம்;

ஆனால், குவலயத்தையே மீட்க வந்த கோமகனை மானிடர் அநீதியாகக் கொன்றபொழுது அத்தாய் இந்த உலகையே அழிக்க முனையாத புதுமை என்ன? உலகை அழித்து வாழ்வு கொடுப்பது மீட்பு வழியல்ல என்று அவள் உணர்த்தினுள்;

அநீதி செய்யும் உலகை அன்பால், பொறுமையால், மன்னிப்பால் மாற்றலாம், மீட்கலாம் என்பது அன்னையின் ஆக்க வழி,

தனயன் காட்டிய பாதையில் தாயும் வழிகாட்டினுள்;

துன்பத்தின் உச்சக்கட்டத்திலும் அவள் பொறுமையாக வாழப் பழகிக் கொண்டாள்; ஆழ்ந்த விசுவாசமே அதற்கு மூலகாரணம்.

தான் பெற்ற மகன் அனுபவிக்கும் ஆழமான, கூர்மையான துன்பத்தை நன்குணர்ந்த அத்தாய் ஆறுதல் சொல்லத்தான் கல்வாரி வந்தாளோ!

ஆயினும், வார்த்தைகள் வரவில்லை அவள் வாயினில்; கண்ணீர் வடிந்தது கன்னியவள் கன்னங்களில் அவளது அன்பும் பிரசன்னமே அவள்பெற்ற பிள்ளைக்கு உறுதுணையாக இருந்திருக்கும்.

அன்றபொழுதில் அவள் பெரிதுவந்தாளோ என்னவோ! ஆனால், சான்றோன் என்று கேட்டு அவள் மகிழவில்லை.

முரணுகை, கொலைகாரன், தேவதூஷணம் சொல்வோன், மக்களைக் குழப்புவோன், பேய் பிடித்தோன் என்று வேண்டாத அடைமொழிகளையே கேட்டு அவள் அழுதவள்.

## ஆறுதல் பெறவேண்டியவரே ஆறுதல் சொன்னர்.

அத்தாய்க்கு மகன் கல்வாரியில் சொன்னது என்ன?

'தாயே! உன்னை அம்மா என்று அழைக்க யாரும் இல்லை என்று எண்ணாதே; நான் வந்த வேலை முடிந்தது. நான் போக வேண்டிய இடத்துக்குப் போகின்றேன்; ஆயினும், உன்னைத் தனியே தவிக்கவிட்டுச் செல்வேனு?

என் அன்புச் சீடர்கள் உன் மக்கள். என்னை ஏற்றுக் கொள்வோர் அனைவருக்கும் நீதான் தாயாவாய், உன்னை அம்மா என்றழைத்துக் கோடிக்கணக்கான பிள்ளைகள் உன்னண்டை ஓடிவருவார்கள்; அவர்கள் அனைவரையும் உன் பிள்ளைகளாக ஏற்றுக்கொள் தாயே.

எனக்குத் தந்த வீரத்தையும், மன உறுதியையும், அன்பையும், ஆழ்ந்த விசுவாசத்தையும், இலட்சியப் பிடிப்பையும் அவர்களுக்கும் கொடுத்து வளர்த்துவிடு தாயே.

நீதியிலும், நேர்மையிலும், உண்மையிலும், சத்தியத்திலும் அவர்களை உறுதியாக வளர்த்து விடு தாயே.

விசுவாசம் என்னும் பாலூட்டி, அன்பில் சீராட்டி அவர்களை வளர்த்துவிடு தாயே.

மனித மீட்பு வேலையில் நீ பங்கு கொண்டது போல் அவர்களும் மீட்பு வேலையில் பங்குகொள்ள வழிவகுத்துவிடு தாயே'!

இயேசுவின் தீர்க்கதரிசனமான வார்த்தைகள் சத்தியமானவை.

## பதினேராவது கட்டம்:

# கல்வாரி மேட்டில் கிறீஸ்துவின் கொடூர மரணம்

(புனித மத்தேயு 27: 45—50)

பிரிவினைக் காலம் நெருங்கியதும் கூடி வாழ்ந்தவருடன் கூடி உண்ண ஆசைப்பட்டார் கிறீஸ்து.

தலைமுறை தலைமுறையாக இஸ்ராயேல் மக்கள் கொண்டாடி வந்த பாஸ்காவிழாவை, கடத்தல் விழாவையே கிறீஸ்து பயன்படுத்தினார்:

பழைய விழாவுக்குப் புதிய பொருள் கொடுத்து, புத்துயிர் கொடுத்து புதிய உடன்படிக்கையை உருவாக்கினார்,

பழைய ஏற்பாட்டில் அமைக்கப் பெற்ற பழைய உடன்படிக்கை சட்டத்தினுலானது,

புதிய ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட புதிய உடன்படிக்கை அன்பினுலானது.

பழைய உடன்படிக்கை, பெட்டகத்தில் வைத்துக் காப்பாற்றப் பட்டது.

புதிய உடன்படிக்கை உள்ளத்தில் விதைக்கப்பட்டு வளர்க்கப் படுவது.

அந்த இறுதி—பிரியாவிடை உணவின் பொழுது பாஸ்கா உணவை அருந்திய பின்னர்—அன்பு மொழி பேசிய பின்னர் இயேசு—

"அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, பிட்டு தன் சீடர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார்."

இச்செயல் வெறும் அடையாளமாக மட்டுமன்றி, வெறும் சின்னமாக மட்டுமன்றி இச்செயல் உயிர்பெற, அழியாச் செயலாக நிலைக்க, வாழும் செயலாக வரலாற்றினூடாக வளர அவர் மறுநாள் கல்வாரி மேட்டில் தன்னையே கொடுத்தார்.

தன் உடலை எடுத்து இறைவனுக்கு அர்ப்பித்து, ஆசீர்வதித்து, உடைத்து, முறித்துப் பிட்டுக் கொடுத்தார்.

மக்களுக்காக—எமக்காக—எமது மீட்புக்காக தனது வாழ்க்கையை உடைத்தார்; முறித்தார் கிறீஸ்து.

அந்த உடைப்பிலும், முறிப்பிலும், மீட்பிலும் நோவுண்டு அந்த நோவில் தியாகமுண்டு. அத்தியாகத்திலே எமது மீட்பு உண்டு.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

அன்பிற்கு இலக்கணம் கூறிய வள்ளுவனின் குறள், இது
"தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட
மேலான அன்பு வேறில்லை"

அன்பின் எல்லையைத் தொட்டுக்காட்டிய கிறீஸ்துவின் அன்பு மொழி, இது.

இரு கூற்றுக்கும் இலக்கியமாய் வாழ்ந்தவரும் கிறீஸ்துவே;

இவ் வாழ்க்கையை உணராதவர்கள் யாருமே இல்லை. அறிந்தவர்கள் புரிந்து கொண்டார்கள். புரிந்தவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

இவ்வாழ்க்கையை அறிந்து, தெளிந்து, புரிந்து ஏற்றுக் கொள்ள கிறீஸ்தவர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

சைவ சமயத்தைத் தழுவிய பெரியார் திரு வி. கலியாணசுந்தரனார் எவ்வளவு ஆழமாகக் கிறீஸ்துவின் வாழ்வை உணர்ந்து தமது உணர்வுகளை அழகு தமிழ்க் கவிதையில் யாத்துள்ளார்.

"சிலுவையிலே கிறீஸ்து உனைச் சேர்த்து
ஆணி அறைந்த கொடுங்
கொலைஞரையும் பகையாது குழைந்தருளைச்
சுரந்ததென்னை ?
பலியிரத்தம் முழுகி மனம் படிந்துருகி மன்னிக்கும்
நிலவுலகம் படைப்பதற்கு நினைந்தருளைச்
சுரந்தமையே."

## கல்வாரியில் முடியவில்லை

கல்வாரியில் தம்மை எமக்கென்று கொடுத்தமையினால் கல்வாரிக் கொலையுடன் கிறிஸ்துவின் வாழ்வு முடிந்துவிடவில்லை.

'கிறிஸ்துவின் வாழ்க்கை' யை இன்றும் எடுத்துச் சொல்லவது பாட நூல்களினால் மட்டுமல்ல, விண்ணை முத்தமிட எழுந்து நிற்கும் கோயில்களினால் அல்ல, விரிவான, ஆடம்பரமான சடங்குகளினால் அல்ல, திருயாத்திரைகளினால் அல்ல, சிலுவைப் பாதைகளிலும் அல்ல;

அயலவருக்காக — நண்பர்களுக்காக வாழ்வதைக்கொண்டே அக் கிறிஸ்துவை இன்று உலகுக்குக் கொடுக்க முடியும்.

எம் மக்களின் மீட்புக்காக நாம் சிலுவைகள் சுமக்கத் தான் வேண்டும். இச் சமுதாயத்தை ஊழல்களிலிருந்து, அநியாயங்களிலிருந்து, கொடுமைகளிலிருந்து மீட்டு, நீதியான, தார்மீகமான ஒரு சமுதாயத்தில் வாழவைக்க நாம் எம்மை முழுமையாக அர்ப்பணிக்கத்தான் வேண்டும்.

அயலவருக்காக நாம் நமது வாழ்வை முறிக்கத்தான் வேண்டும், உடைக்கத்தான் வேண்டும், நாம் எம்மைப் பியத்துக் கொடுக்கத்தான் வேண்டும்.

அந்த உடைப்பிலும், முறிப்பிலும், பியப்பிலும் ஏற்படும் நோவைத் தாங்கத்தான் வேண்டும். அதுதான் எமது சிலுவை.

கிறீஸ்தவ வாழ்வு ஒரு மதம் என்ற அமைப்புக் குட்பட்டு வெறுஞ் சட்டங்களையும், சடங்குகளையும் அனுசரித்து வழிபட்டு வாழும் ஒரு மறை நிறுவனமல்ல;

"உன் சிலுவையைச் சுமந்துகொண்டு என் பின்னாலே வா" — இது கிறீஸ்துவின் அன்புக் கட்டளை;

அயலவரை — உன் சமூகத்தை வாழவைக்க வேண்டுமானால் நீ சிலுவை சுமக்கத்தான் வேண்டும்.

இச் சிலுவையை சமூகத்துக்காக, அயலவருக்காக சுமக்கும் ஒவ்வொருவனும் ஓர் இலட்சியவாதி ஒரு கிறீஸ்தவன்.

## பன்னிரண்டாவது கட்டம்:

# கல்லறையில் கிறீஸ்துவை அடக்க முயற்சி

(புனித மத். 27 : 57 — 60)

சிலுவையிலே சடலம் தொங்கியிருப்பதைப்பார்க்க சகிக்காது தானே!

ஆனால், சீடர்கள் பயத்தின் நிமித்தம் எங்கோ ஒரு மறைவிடத்தில் ஒதுங்கிக் கொண்டார்கள்.

கிறீஸ்துவின் அபிமானிகளில் ஒருவரான அரிமத்தியா ஊரவரான சூசை, செல்வந்தர் மட்டுமல்ல ஆள்வோரிடையே செல்வாக்கும் பெற்றிருந்தார்.

அவர் துணிந்து சென்று மன்னனிடம் உத்தரவு பெற்ருர். தனக்கென்று செதுக்கிய கல்லறையில் இயேசுவின் உடலை அடக்கஞ் செய்தார்.

கிறீஸ்துவின் சீடர்களுக்கு ஒரே பயமும், ஏக்கமும். "இவர் தன்னை மெசியா என்று சொன்ஞரே! மூன்று வருட சேவையுடன் இவர் வாழ்க்கை முடிந்துவிட்டதே! நாமும் ஏமாந்து விட்டோமா ?"

"அப்படியாஞல் இவரின் போதனைகளின் பொருள் என்ன ? இவரின் அரும் குறிகளின் அர்த்தம் என்ன ? இவரின் தீர்க்கதரிசனமான அறிக்கைகளின் வலுவென்ன ?"

இவை சீடர்களின் விஞக்களாக இருந்திருக்கலாம். ஒரே குழப்பமாக இருந்திருக்கும். அதே ஆள்வோரின் கண்டனக் கண்பார்வை அடுத்துத் தங்கள்மேல்தான் விழுமோ என்ற பயமும் ஆட்கொண்டிருக்கும்.

## விசுவாசம் வளர........

உண்மையான விசுவாசம் வேரூன்றி வளர இப்படிப்பட்ட குழப்பங்கள் அவசியம் வேண்டும்.

இப்படியான மனக் குழப்பங்கள், சிந்தனைக் குழப்பங்கள் ஏற்படவில்லையென்ருல் விசுவாசம் ஆழமாக வளர்வதற்கு வழி இல்லை.

அதே வேளை இயேசுவைக் கொன்ருேரும் குழம்பினர்.

பொருளற்ற சட்டங்களையும், அர்த்தமற்ற வழிபாடுகளையும் கடுமையாக விமர்சித்து கிறீஸ்துவை தீர்த்துக் கட்டிய மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டுதான்; ஆயினும், எங்கிருந்தோ ஒரு குழப்பம் அவர்களுக்கு வந்தது.

கல்லறை போன்ற அவர்களின் மன அறைகளிலும் ஒரு விரிசல் தோன்றியது. வாழும் பொழுது பெரும் சாதனைகளைச் செய்தவன் ஒருவேளை உயிர்ப்பாஞே? வாழும்பொழுது உறுதியான தீர்க்கதரிசனமான சத்தியமான வார்த்தைகள் சொன்ஞரே !

ஒருவேளை சொன்னதுபோல் உயிர்த்துவிட்டால்!

நாத்திகம் பேசுவோனும் நம்பிக்கையோடு பேசுவதுண்டல்லவா?

ஆண்டவன் இல்லையென்று அடித்துச் சொல்பவனும் ஆபத்து வேளையில்—அவசரத் தேவையில் "ஆண்டவன் அருளினிலே" என்று பாடுவதுண்டல்லவா?

## பதின்மூன்றாவது கட்டம்:

# உயிர்த்தெழுந்தார் கிறீஸ்து!

(புனித மத். 28: 1—8)

உண்மையான அன்பு செய்தவர்கள் பிரிவைத் தாங்க மாட்டார்கள். ஓர் இனந்தெரியாத தாகம் அவர்களை ஆட்கொள்ளும். பிரிந்து சென்றவர்கள்பால் அவர்கள் வைத்த அன்பையும், பாசத்தையும் அறுத்துவிட முடிவதில்லை. ஒரு வெறுமை உணர்ச்சி அவர்களைத் தாக்குவதுண்டு. அதனாலேயே இறந்தவரை அடக்கஞ் செய்த பின்னரும் அன்பு செய்தவர்கள்—உறவை வளர்த்தவர்கள் கல்லறை செல்வார்கள். அக்கல்லறையில் மலர் வைத்துக் கண்ணீர் சிந்தி வருவார்கள்.

கிறீஸ்துவையும் அடக்கஞ் செய்தார்கள். அவரது சீடர்களோ பயந்து ஒதுங்கிவிட்டார்கள். வெளியில் தலைகாட்ட அவர்கள் விரும்பவில்லை. இச்சீடர் இன்னும் கிறீஸ்துவைப் புரிந்து கொள்ளவில்லை.

கிறீஸ்துவை ஓரளவு அறிந்து அவர்பால் உண்மையான, தூய்மையான அன்பு கொண்ட மேரி விடியுமுன்னரே யாருமே வீதியில் இல்லாத சமயம் கல்லறை நோக்கிச் சென்றாள்.

ஒரு காலத்தில் அவளுடன் பாவத்தில் கலந்த அதே சமூகம் அவளைமட்டும் பாவி என்று தள்ளி வைத்தது. ஆனால், கிறீஸ்து அவளை ஏற்றுக்கொண்டார். அவள் அதிகம் அன்பு செய்தபடியினால் அவளுக்கு அதிக மன்னிப்புக் கிடைத்தது. அதிக அளவு அருளும் கிடைத்தது.

காய்கைக்குக் கனவிலும் ஏதோ எண்ணம் என்பது போல் அன்று அவளுடன் பாவத்தில் கலந்த பெரியோர் பலர் இயே சுவையும் சந்தேகத்துடன் பார்த்தனர். தங்கள் அனுபவங் களை மற்றவர்மேல் சுமத்திப் பார்ப்பது பரிசேயர் போன்ற வர்களுக்கு இயல்பாக வந்துவிடும்.

அந்த மரியாள்தான் கிறீஸ்துவின் பிரிவைத் தாங்க முடி யாமல் — உள்ளத்தில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப முடி யாமல் கல்லறை சென்றாள், கண்ணீர் சிந்த, அடக்கஞ் செய் யப்பட்ட உடலை தைலத்தால் பூசுவது அந்தக் காலத்து மரபு.

அவ்வாறே கிறீஸ்துவின் உடலையும் தைலம் பூசி, பழைய நினைவுகளை மீட்டுப் புதுப்பித்து, நெஞ்சினிக்கும் அந்த நினைவு களைப் புதுப்பித்து மகிழ அவள் கல்லறை சென்றாள்.

ஆனால், அவள் கண்டது என்ன? இறந்த கல்லறை. உயிர்த்த கிறீஸ்துவை அவள் கண்டாள். உள்ளத்தில் அக்கிறீஸ்துவை முழுமையாக அனுபவித்தாள்.

இலட்சியவாதிகளைக் கொல்லலாம், ஆனால், இலட்சியங் களைக் கொல்ல முடியாது என்பது வரலாற்று ஆசிரியர் களின் அனுபவக் கூற்று.

கிறீஸ்து ஓர் இலட்சியவாதி மட்டுமல்ல அவர் மனிதனை மீட்க வந்த மெசியா—மீட்பர்—இரட்சகர்.

முழு மனிதனும் மீட்புப் பெற வேண்டும். அவன் முழு மனிதனாக வாழ்ந்து வளரவேண்டும். அதற்கு எந்த ஒரு தடை யும் இருக்கக் கூடாதென்று அவர் ஆணித்தரமாக எடுத்து ரைத்தவர்.

அவரது இலட்சியத்தைக், குறிக்கோளை அவரே பழைய ஏற்பாட்டு ஆகமமொன்றில் இருந்து எடுத்துக் காட்டினார். மூன்றாண்டு பகிரங்க வாழ்வைத் தொடங்கு முன்னர் அவரே தமது முதலுரையில்-கொள்கைஉரையில்—இலட்சிய உரை யில் கூறினார்.

"ஆண்டவருடைய ஆவி என் மேலே, ஏனெனில், என்னை அபிஷேகம் செய்துள்ளார். எளியோர்க்கு நற்செய்தி சொல் லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர், குருடர் பார்வை

பெறுவர் என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினார்''

(லூக்: 4: 18-19)

இந்த இலட்சியத்தை நடைமுறைப்படுத்த முயன்ற பொழுது அவரை அழித்துவிட முனைந்தது அதிகாரத்தைத் தன்னுள் வைத்திருந்த கூட்டம்.

ஆனால், அவரை அழிக்க முடியவில்லை; அவரைக் கொன்று அடக்கஞ் செய்த பின்னர் முற்றும் முடிந்தது என்று இறுமாப்புக் கொண்டது அந்தக் கூட்டம்.

ஆனால், அவரை அடக்க முடியவில்லை. அவரது இலட்சியம், மீட்புச் செயல் கல்லறையையும் உடைத்தது. காவலையும் தகர்த்தது; காலத்தையும் வென்றது; காலனையும் மீறியது. அந்தோ! அவர் உயிர்த்துவிட்டார்.

இன்றும் அவர் வாழுகின்றார்! தமது தொண்டர்கள் மூலம், சேவையாளர் மூலம் அவரது இலட்சியம் வாழுகின்றது; அவரது மீட்பு வேலை தொடர்கின்றது.

நாம் கிறீத்தவர்களா? நாம் கிறீஸ்துவின் இலட்சியத்தில்—மீட்பில் பங்கு கொண்டவர்களா?

அப்படியானால் தன்னலங்கருதாது, பட்டம் பதவி பாராது, பொருள் பணம் தேடாது, செல்வாக்கு நோக்காது கிறீஸ்துவின் மீட்பு வேலையை இன்னும் தொடர்வோம்.

வெறும் வழிபாடுகளில் காலத்தைக் கழியாது வெறும் தவநாட்கள், வெறும் ஆராதனைகளில் எம்மை மறவாது, வெறும் சமூக சேவை என்ற பெயரில் அநீதியை வளரவிடாது நேரடி மீட்பு வேலையில் பங்கு கொள்ள நாம் உறுதி கொள்ள வேண்டும், செயற்பட வேண்டும்.

பதினொலாவது கட்டம்:

# சென்று சொல்லுங்கள்; சென்று வாழுங்கள்! கிறீஸ்துவின் அன்புக் கட்டளை

(மத். 28 : 16—20)

கிறீஸ்துவின் உலகவாழ்வு முடிவெய்தும் கட்டம்; வையத்துள் அவர் வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வத்துள் சங்கமமாகும் கட்டம்; அவர் உலகிற்கு வந்த பணி முடிவடையும் கட்டம்;

இச் சிலுவையின் பாதையில் அவரது உலக வாழ்வைச் சுருக்கமாகச் சிந்தனை செய்தோம்.

பழைய ஏற்பாட்டின் பத்துக் கற்பனைகளையும் "அன்பு", என்ற ஒரேயொரு கட்டளையில் அழகுறத் தொகுத்து, அன்பு செய்யச் சொன்னார், கிறீஸ்து. அன்பிற்கு இலக்கணம் கூற விழைந்து அவ்வன்பையே வாழ்ந்து காட்டினார், தெய்வ மகன் அவர்;

உலகை மீட்க—இரட்சிக்க ஒரேயொரு வழி — உண்மையான அயலவர் அன்புதான்.

மனித மீட்பு வெறும் பாவத்திலிருந்து புண்ணியத்துக்கு மட்டுமல்ல, மனித இரட்சிப்பு வெறும் ஆன்மீக ரீதியாக மட்டுமல்ல; மனித விடுதலை அகத்தில்மட்டுமல்ல,

மனித மீட்பு—மனித விடுதலை முழுமையானது, பொருளாதார ரீதியாக, அரசியல் ரீதியாக, சமூக ரீதியாக, மத ரீதியாக மனிதன் முழுமையான விடுதலை அடைய வேண்டும். இன்னும் கூறவேண்டுமானால் — சட்ட மனப்பான்மையில் இருந்தும், சடங்கு மனப்பான்மையில் இருந்தும் அவன் விடுதலை பெறவேண்டும்.

ஏன், மொழி, கலை, கலாச்சார பண்பாட்டு ரீதியாகவும் மனிதன் விடுதலை பெறவேண்டும்; எந்த ஒரு அடக்கு முறையும், எந்த ஒரு அடிமை வழியும் மனித மீட்பல்ல: இது தான் கிறீஸ்தவ மீட்பு — கிறீஸ்தவ இரட்சிப்பு — கிறீஸ்தவ விடுதலை.

இம் மீட்பைப் பெற்றுத்தர — பெறும் வழியைக் காட்டவே கிறீஸ்து மனித அவதாரம் எடுத்தார்.

இம் மீட்பின் வழி உண்மையான அன்பு — ஆழமான விசுவாசம் — அசையாத நம்பிக்கை — நீதிக்கென்று துடிக்கும் ஒரு நெஞ்சம். இக் கிறீஸ்தவ பண்புகளை அன்றாட வாழ்க்கையில் வாழ அஞ்சாத கிறீஸ்தவ வீரம். இப்படி ஒரு வாழ்வை வாழ்வதுதான் சிலுவையின் பாதை; காரணம்— இந்த வாழ்க்கை சுமையானது—பாரமானது—கஷ்டமானது.

ஆனால், சுமக்க நாம் துணிந்துவிட்டால் கிறிஸ்துவின் அன்பும் அருளும் வழிகாட்டலும் எமக்கு என்றுமே உண்டு. "இறுதிவரை அவர் எங்களோடு இருப்பார்; எங்களில் இருப்பார்."

இதுதான் கிறீஸ்துவின் அன்பின் அழைப்பு. இதுதான் அவரின் அன்புக் கட்டளை. இதுதான் அவரின் தன்னிகரற்ற நற்செய்தி.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்." நீங்கள் இவ்வின்பத்தை — இந்த நற்செய்தியைப் பெற்றுக்கொண்டால்—செல்லுங்கள்—சென்று சொல்லுங்கள்! ஊரும் உலகும் அறிய எடுத்துச் சொல்லுங்கள்! வீடும் நாடும் அறிய எடுத்துரையுங்கள்! ஏற்றுக்கொள்ளும் அனைவரும் ஒருங்கிணைந்து முழு மனித மீட்புக்காக உழையுங்கள்.

ஆண்டவனின் அன்பும் அருளும் சாந்தியும்

உங்களோடு என்றும் இருப்பதாக.

புனித வளன் கத்தோலிக்க அச்சகம்,
யாழ்ப்பாணம்.